Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-13 | 28-12-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -314







# உயிரிழப்பு 20,000 வரையில் உயர்வு

# 10,000 பேரைக் காணவில்லை

## தொடர்ந்தும் மீட்புப் பணிகள்

(நமது நிருபர்)

**கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட பேரலை எழுச்சியாலும் கடல் உட்புகுந்ததாலும் தமிழர் தாயகப் பகுதியில் 15,000இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ள இதே சமயம் இவை இலங்கை பூராகவும் என்ற ரீதியில் 20,000இற்கும் அதிகமானோர் இறந்திருக்கலாமெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேசமயம் 10,000 வரையில் காணாமற் போயிருக்கலாமெனவும் தெரியவருகின்றது. இதேவேளை மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.**

மட்டக்களப்பில் நேற்று மாலை வரை 796 சடலங்கள் வைத்தியசாலை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பல சடலங்கள் அடையாளம் காணப்படாமையால் அவை அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. அம்பாறையில் உயரிழந்தோரின் எண்ணிக்கை 6000என அறிவிக்கப்பட்டுள்ளது. சம்மாந்துறையில் 1250 பேர் பலியாகினர். கல்முனையில் 2200 பேர் பலியாகினர். சாய்ந்தமருதுவில் 85 பேரும், திருக்கோவிலில் 145 பேரும், அக்கறைப்பற்றில் 48 பேரும், பலியாகினர். இவர்களில் சுமார் 1000 பேரின் உடல்கள் நேற்று

(12 ஆம் . பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

26.12.2004 அன்று உடுத்துறைப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின் காரணமாகப் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

லெப்டினன்ட்-அமுதருவி (தவராசதுரை-வாகினி)உடுத்துறை வடக்கு தாளையடி யாழ்ப்பாணம் என்ற போராளியே சாவடைந்தவராவார்.

26.12.2004 அன்று யாழ். நாகர் கோவில் பகுதியில் கடமையில் இருந்த போது இயற்கை அனர்த்தத்தின் காரணமாக தமிழீழத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்கொந்தளிப்பு ஏற்பட்ட பகுதிகளில் தொற்று நோய் ஏற்படும் அபாயம்

### தமிழீழ சுகாதார சேவையினர் எச்சரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கடற்கொந்தளிப்புக்காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபகுதிகளில் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயநிலை உருவாகியிருப்பதாக தமிழீழ சுகாதாரசேவையினர் தெரிவித்துள்ளனர்.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகள் அனைத்திலும் தொற்று நோய்த்தாக்கம் ஏற்படும் அபாய நிலை உருவாகி உள்ளது. எனவே கடற்பெருக்கு இடம் பெற்ற பகுதிகளில் உள்ள எந்தப்பொருட்களையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தாயகத்தில் புனர்வாழ்வுப் பணிகளுக்கு செயலணிக்குழு அமைப்பு!

(கிளிநொச்சி)

தாயகப்பிரதேசத்தில் கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ செயலணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இச்செயலணிக்குழுவில் மாவட்டச் செயலர்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர் புனர் வாழ்வுக்கழகம் ஆகியவற்றினதும், விடுதலைப்புலிகள் அபிவிருத்தித் திட்டமிடல் செயலக பிரதிநிதியும் ஒருங்கிணைந்து இந்த செயலணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தலைமையில் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில் இடம் பெற்றது. இந்த செயலணிக்குழு அமைக்கப்பட்டதோடு இக்கட்டடத்தில் தற்போதைய நிலைமை மக்களுக்கு நிவாரணப் பணி அத்துடன் மீட்புப்பணி தொடர்பாக ஆராயப்பட்டது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தேசியரீதியாக உதவுவதில் இந்த செயலணிக்


(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.இல் மண்ணிற்குள் 15000 தமிழர்கள் புதைந்திருப்பதாகச் சந்தேகம்?

மட்டக்களப்பு நாவலடிக் கிராமம் மண்ணால் மூடப்பட்டுள்ளதால் 15000 பேர் புதையுண் டிருக்கலாமென எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று இரண்டு மணித்தியாலத்தில் 600 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது. கடலரிப்பால் பல கிராமங்கள் மூடப்பட்டும், பல இடங்களில் புதிய தீவுகளாக மண் அணைகள் உருவாகியுள்ளது டன் சுமார் 10 கிலோமீற்றர் தூரம மண்புதிதாக வந்திருப்பதாகவும் இம்மண்ணைத் தோண்டியே சுமார் 1500 மக்களின் உடல்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு த.பு.கழகம் உதவி

(அலுவலக செய்தியாளர்)

இயற்கையின் சீற்றத்தால் பேரழிவுக்கு உள்ளான தமிழர் தாயகத்தின் பெரும் பகுதி பாதிப்பிற்குள்ளாகி நிர்க்கதியாகி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்களிற்கு உணவு, உடை உட்பட இதர வசதிகளை வழங்கி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரித்து வருகின்றது.

அனைத்து உடமைகளையும் இழந்து ஏதிலியாக்கப்பட்டுள்ள மக்களிற்கு வழங்குவதற்கென தமிழர் தாயகத்தின் பல பகுதிகளில் இருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் சமூக அமைப்புகளா லும், வர்த்தக நிலையங்களாலும், மக்களாலும் உணவல்லாத பொருட்கள் பெருமளவில் வழங்கப் பெற்று வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அந்தந்த மாவட்ட செயலகங்களிலும் பங்காளி நிறுவனங்களிலும் இவ் உதவிப் பொருட்கள் வந்து குவிந்த வண்ணமுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருப்போர்

## வெளிநாடுகளிலுள்ள உறவுகளுக்கு இலவசமாக தகவல் அனுப்ப ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளவர்கள் தமது நிலைகுறித்து புலம் பெயர் நாடுகளில் வசிக்கின்ற அவர்களின் உறவினர் களுக்கு இலவசமாக தகவல் அனுப்ப முடியும் என பன்னாட்டு தொலைத்தொடர்பகம் (நந்தவனம்) தெரி வித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தமது நிலைப்பாட்டை புலம பெயர் நாடுகளில் வசித்துவரும் தமது உறவுகளுக்கு தெரியப்படுத்தும் முகமாக மனிதாபிமானமான முறையில் இந்தகைய செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருமளவான மக்கள் முகாம்களில் தங்கியிருப்பதால் நந்தவனப் பிரதிநிதிகள் முகாம்களுக்கு தேடிச் சென்று விபரங்களைச் சேகரித்து வருகின்றனர். இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற விபரங்கள் அனைத்தும் இன்று மாலைக்கு முதல் சம்பந்தப்பட்டவர்களுக்கு சென்றடையும் எனவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## —வரிவிளம்பரம்—

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி 2007. A/L கணித, விஞ்ஞான கலைவர்த்தகப் பிரிவு கள் ஆரம்பம்:- 03.01.2005 (திங்கள் 8.00 A.M) (54480)

### வகுப்புக்கள் ஆரம்பம்

ஜேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி05.தொடக்கம்O/L வரையான வகுப்புக்களுக்கான புதிய பிரிவுகள்ஆரம்பம்:- 01.01.2005 (சனிக்கிழமை 8.00A.M) (5448)

### உயிரியல் கருத்தரங்கு

இடம்:- கேம்பிறிஜ் கல்லூரி உதயநகர் (டிப்போறோட்)காலம் :- 29.12.2004 (புதன்கிழமை) (8.30 A.M), ஆசிரியர் M.S.T.NESAN) (5448)

### வீடு விற்பனைக்கு

புதுக்குடியிருப்பில் சுவையூற்றுக்கருகாமையில் 1/2 ஏக்கர் காணி, வீடு, கிணறு மலசலகூடம் என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு உரிமையாளர் "இனியவன் அழகுமாடம்" முல்லைத்தீவு உரிமையாளர் இன்பன் மணிக்கூட்டுத் திருத்தகம், புதுக்குடியிருப்பு. (5071)


# வடமராட்சியில் இடம்பெயர்ந்த மக்கள் 22 பாடசாலைகளில் தஞ்சம்

இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளார்கள். இவர்களுக்கு வடமராட்சி அரசியல் துறையினர் பொது அமைப்புக்கள், தனியார் போன்றோர் உதவி வருகின்றனர். இம்மக்கள் 22 பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை இடம்பெயர்ந்து முகாம்பகுதிகளில் வாழும் உறவுகளுக்கு உதவுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையினையடுத்து , குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் மூலம் பொருட்கள் வடமராட்சிக்குக் கொண்டு வரப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களிற்கான உதவி எனும் பாதகைகள் கட்டப்பட்டு உதவிப்பொருட்கள் வலிகாமத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும்வாகனங்கள் மூலம் எடுத்துவரப்பட்டன.

இதேவேளை முகாம்களிலும் குறிப்பாக பாடசாலை, ஆலயக் கட்டடங்களினில் தங்கியுள்ள கரையோரப்பகுதி மக்களிற்கு மூன்று வேளையும் சமைத்த உணவு வழங்கப்பட்டது.

இதனிடையே மந்திகை அரசினர் வைத்தியசாலைப்பகுதிக்கு மேலதிக மருத்துவர்கள் குழுவும், மருத்துவபீட மாணவர்களும் வருகைதந்து காயமடைந்த பொது மக்களிற்கான சிகிச்சைகளை வழங்கினர்.

மறுபுறத்தே உயிரிழந்தவர்களது குடும்பங்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ள நிலையில் சடலங்களை இறுதிக் கிரியைக்கு வைக்கவோ, அஞ்சலி செலுத்தவோ முடியாத பரிதாபநிலை நீடிக்கிறது.

இந்நிலையினில் உயிரிழந்தவர்கது சடலங்களை அவ்வப்பகுதிகளில் பொதுவான இடங்களினில் அஞ்சலிக்கு வைத்து இறுதிக் கிரியைகளை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனிடையே வடமராட்சி கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பினால் உயிரிழந்த இராணுவக் கடற்படையினரது சடலங்களும் பலாலியில் வைக்கப்பட்டுள்ளது. அங்கு விஜயம் செய்த பருத்தித்துறை நீதவான் மரணவிசாரணைகளின் பின்னர் சடலங்களை சொந்த இடங்களிற்கு அனுப்பி வைக்க அனுமதியளித்துள்ளார். (27)

# இலங்கை செஞ்சிலுவை தொண்டர்களுக்கான அவசர அழைப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முதலுதவிப் பயிற்சி, தேவைகளை இனங்காணல் பயிற்சி, அனர்தங்களிற்கான முன் ஆயத்தங்கள் செய்தல் பயிற்சி, நிவாரணம் கொடுப்பதற்கான பயிற்சி, ஆரம்பசுகாதார பயிற்சி பெற்ற தொண்டர்களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக்கிளைக்கு இன்று காலை சமுகம் கொடுக்குமாறு வேண்டுகின்றனர்.

இம்மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான முதலுதவி நிவாரணம் மற்றும் ஏனைய சேவைகளை மேற்கொள்வதற்காகவே தொண்டர்களையும் அங்கத்தவர்களையும் சமூகமளிக்குமாறு சங்கச்செயலாளர்திரு. தி.உதயகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (32)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசியப் பொருட்கள் வழங்குக

## -யாழ்.மாவட்ட அரசியல்துறை

கடல் கொந்தளிப்பினால் பாதிப்புற்று, வடமராட்சி இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பண்டங்கள், உடை, சிறுவர்களுக்கான பால்மா வகைகள்,பாய்,தலகணி மிக அவசரமாகத் தேவைப்படுகிறது. எனவே சமைத்த உணவைத்தவிர்த்து. மேற்படி பொருட்களை அனுப்பிவைக்குமாறு தமிழ் மக்களை யாழ். மாவட்ட அரசியல்துற்றையினர் கேட்டுள்ளனர்.

# பருத்தித்துறை ,மணற்காட்டுப்பகுதியில் உயிரிழந்த மக்களின் ஒரு பகுதியினர் விபரம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மணற்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற் கொந்தளிப்பின் போது உயிரிழந்தவர்களில் மேலும் ஒரு தொகுதியினரின் பெயர் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவை வருமாறு,

சிவபாதம் சிவகரன் (வயது-25),சுகிர்தா சிவகரன்(மூன்றரை வயது), சுந்தரலிங்கம் தங்கமலர் (வயது-41), சூரியமூர்த்தி சிலோஜன்(வயது -25), சந்திரதாஸ் சர்மிளா (வயது-09), கந்தையா தேசிங்கராஜா (வயது -35), தேசிங்கராஜா- இளவரசி(வயது-26), இராசு அமராவதி (வயது-50), ஜெயரூபன் வனிதா (வயது -13), நவரத்தினம் சின்னாச்சி(வயது-55), லோகநாதன் கௌசி (வயது-04), யோகநாதன் திசாயினி (வயது-இரண்டரை), செல்வம் பிரபாரகன் (வயது-19),ஆறுமுகம் வள்ளியம்மா (வயது-72), கந்தசாமி இலட்சுமியம்மா (வயது-85), கந்தசாமி தங்கலீலாம்மா (வயது-65), சுரேந்திரன் கலைவாணி (வயது 23), அம்பிகாவதி இராஜேஸ்வரி (வயது-45), நந்தகோபால் நவநீதன் (வயது-12), கனகசபை நாகமுத்து (வயது-70), இருதயதாஸ் அன்றுக்கனீசா (வயது-04),இருதயதாஸ் அன்ரனி ஜெனி (வயது-01), இரத்தினவடிவேல் அர்ச்சுனராசா (வயது-50), தங்கவடிவேல் மகாலக்ஷ்மி (வயது-50), அம்பிகாவதி சூரியப்பிரகாசம் (வயது-09), அகிலதாஸ் கிஷோர் (வயது-09), கங்கசாமி ஆறுமுகம் (வயது-68), சிவனேஸ்வரராசா கிருஸ்ணப்பிரியா (வயது-09), மனோகரன் சுகந்தன் (வயது-09), மகாலிங்கம் அம்மன்கிளி (வயது-70),அந்தோனிப்பிள்ளை அமலோற்பவம் (வயது-65), தவரட்ணம் றொண்சிகா (வயது-12),வடிவேலு நவரத்தினம் (வயது-55), வின்சன் இராசகுமார் மேரி றொக்சன், குணரத்தினம் சரஸ்வதி (வயது-75), சின்னத்துரை மீனாட்சி (வயது-80), கண்ணதாசன் நிதர்சன் (வயது-10),அகிலதாசன் சிந்துஜா (வயது-5),வர்ணகுலசிங்கம் ஜெயந்தி (வயது-42), வர்ணகுலசிங்கம் ஜெலான் (வயது-6), ஜோசப்பு மேரிமர்னா (வயது-22), மரியாம்பிள்ளை மரியப்பு லோசனா (வயது-42), ஆரோக்கியநாதன் எட்வேட் (வயது-30), எட்வேட் சாதுரியா(வயது-2), எட்வேட் பேபியம்மா(வயது-38),நீக்கிலஸ் அந்தோனிப்பிள்ளை உதயசீலி (வயது-10), அடைக்கலம் ஜோர்ஜ் (வயது-39), ஜோசப் பெர்னாண்டோ சிந்து, பொன்ராசாஇன்பம்(வயது-38),இமானுவேல் ராஜீவன் (வயது-16), சிங்கர் பிலிப்பையா (வயது-75), மதியழகன் பேபி துஷ்யந்தி (வயது-02), திருச்செல்வம் ரூபா (வயது-19), அன்ரன் சோதியா மரிய ஜொறினா, அன்ரனி சேவியர் டிலோஜினி (வயது-05),பேதுறுப்பிள்ளை மலர் (வயது-60), யோசப் செபமாலையம்மா (வயது-80), பன்னீர்ச் செல்வம்மேரி யூனெஸ்கா (வயது-05), சிவப்பிரகாசமம் சிவானந்தன் (வயது-64),சுபேந்திரராசா வசந்தராசா(வயது-18), ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் சத்தியசீலன் (வயது-31), அடைக்கலம் வசிண்டா (வயது-40), அருள்பிரகாசம் பிரான்சிஸ்சம்மா (வயது-57), பவா (வயது-25)

# வடக்கு கிழக்கு மக்களின் துயர்துடைக்க நிதியம் ஆரம்பம்

இந்து சமுத்திரத்தில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட மக்களில் குறிப்பாக வடக்கு கிழக்கு மக்களில் குடும்பங்களின் துயர்துடைக்கும் பணிக்கான நிதியம் ஒன்றை யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை, நல்லூர் ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கி திருநெல்வேலி கணக்கு இலக்கம் 11719இல் ஆரம்பித்துள்ளது, உதவி புரிவோர். நல்மனம் படைத்தோர் அரச, அரசசார்பற்ற கூட்டுறவு மற்றும் பொது நிறுவனங்கள் இந்த நிதிய கணக்கிலக்கத்திற்கு அல்லது நேரடியாக தங்கள் பகுதியிலுள்ள தேசிய எழுச்சிப் பேரவைச்செயலகத்தில் ஒப்படைத்து பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் படி தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளார்.(33)

# கலந்துரையாடல்

யுத்த அனர்த்தங்களினால் ஏற்கனவே சொல்லொனாத்துன்பங்களையும், இழப்புக்களையும் சந்தித்து அதிலிருந்து மீளமுன் இயற்கையின் சீற்றத்தினால் ஏற்பட்ட எதிர்பாராத இழப்புகளுக்கும் துன்பியல் நிகழ்வுகளுக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறது. அதேவேளையில் சகல நிறுவனம்களையும் பாதிப்புக்குள்ளாகி ஆதரவற்றிருக்கும் எம்மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் தம்மாலான சகல உதவிகளையும் வழங்க முன்வருமாறு அன்புக்கரங்கள் நீட்டி அழைக்கின்றோம் .சகல உள்ளூர், தேசிய, சர்வதேச நிறுவனங்களையும் இல.40,கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இணையக் காரியாலயத்தில் இன்று (28.12.2004) பி.ப.3.00 மணியளவில் இடம்பெறும் கலந்துரையாடலில் உடனடியாகக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (33)


## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சியிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடாத்தப்பட விருந்த, சமூக சுகாதாரப் பணியாட்களுக்கான (C.H.W) இறுதிப்பரீட்சைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
லில்லிமொன்ரானோ
ICRC- மல்லாவி.

(5450)

## காடுமாற்ற அறிவித்தல்

வடமராட்சி கிழக்கு வத்திராயன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இரா சையா-மகேஸ்வரி அவர்களின் ஈமக்கிரியை நிகழ்வுகள் நேற்று (27.12.2004) மாலை 4 மணிக்கு திருவையாறு இந்துமயானத்தில் நடைபெற்றது. அன்னாரின் சாம்பல் காடுமாற்று நிகழ்வு இன்று ஈமக்கிரியை நடைபெற்ற இடமான **"முதலாம் பகுதி மூலிகைத்தோட்டம், திருவையாறு-கிளிநொச்சி"** என்ற முகவரியில் இடம் பெறும் என்பதனை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரிற்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
**மகன்மார்,**
**தனா,தயா.**

(5455)

## சாவு அறிவித்தல்

அமரர்

### இராசையா- மகேஸ்வரி

வடமராட்சி கிழக்கு வத்திராயன் - வடக்கு தாழையடியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் இராசையா - மகேஸ்வரி கடந்த 26.12.2004 அன்று நடைபெற்ற கடற்பெருக்கு வெள்ளஅனர்த்தத்தின் போது காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற கதிர்காமு இராசையாவின் அன்பு மனைவியும், கண்ணப்பு நல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், பரமேஸ்வரி, நாகேஸ்வரி ஜெயராசா, ஜெயபாலா ஆகியோரின் சகோதரியும், காலம் சென்ற கோகிலாள் காலம் சென்ற முத்தம்மா மனோன்மணி, இராசரத்தினம் இளையதம்பி, சூர்தம்மா, சின்னம்மா ஆகியோரின் மைத்துனியும், நிர்மலாதேவி, இரவீந்திரராசா, சித்திராதேவி, ரேணுகாதேவி (தமிழர் புனர்வாழ்வுக்கழகம்) யுவராஜ் (மாவீரர் வினோத்) தனராஜ்,தயராஜ் ஆகியோரின் அன்புத்தாயாரும். தவராசா இன்பமலர், தங்கராசா, யோண்கிறிஸ்ரி, உதயராகினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும். ஜெசிந்தா, சுசிந்தா (போராளி யாழ் நிலா)செந்தா, நிமல்ராஜ், சுமன்ராஜ், ஜெசி, ஜெனோ, வேணுஷா நிதீஸ், நிஷாந், நேசகுலேந்திரன் (குட்டி) திருக்குமரன் ஆகியோரின் பேத்தியாரும், ரவிவர்மனின் பூட்டியும் ஆவார். இவரின் ஈமக்கிரியைகள் மகள் யோண்கிறிஸ்ரி ரேணுகாதேவியின் முதலாம் பகுதிமூலிகைத் தோட்டம், திருவையாறு கிளிநொச்சி என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக 27.12.2004 4.00மணிக்கு திருவையாறு இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
**அன்னாரின் பிள்ளைகள்**
**தனா, தயா.**

(5449)

# இந்தியா முதல் இந்தோனேசியா வரை கடல்கொந்தளிப்பால் 21 ஆயிரம் பேர் பலி

**நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய கடல் கொந்தளிப்பால் இந்தியா முதல் இந்தோனேசியா வரையான ஆசிய நாடுகளில் ஏற்பட்ட பேரழிவுகளால் இறந்தோரின் எண்ணிக்கை இருபத் தேழாயிரத்தைத் தாண்டி உள்ளது.**

இதேவேளை பலியானோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக் கலாமெனவும் தகவல்கள் தெரி விக்கின்றன. இந்தியாவில் ஐயா யிரத்து எழுநூறு பேரும், இந் தோனேசியாவின் வடபகுதியில் நாலாயிரத்தித்தொழாயிரம் பேரும, தாய்லாந்தில் எண்ணூற்றி முப்பத் தொரு பேரும், அந்தமான் நிக் கோபார் தீவுகளில் மூவாயிரத் தைத் தாண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை மாலைதீவுக ளில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. அத்துடன் ஆயிரக் கணக்கானோரைக் காணவில்லை எனவும் தெரிவிக்கின்றன.

"டிசுனாமி" என்ற கொடூர கடல் கொந்தளிப்பு தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் ஆறா யிரத்திற்குமதிகமான மக்கள் உயி ரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு தொடங்கிய கடல் கொந் தளிப்பு பிற்பகல் வரை மீண்டும், மீண்டும் ஓசையின்றி வந்து தாக்கு தல் நடத்தியது.

தமிழ் நாட்டில் சென்னையில் தொடங்கி குமரிமுனை வரை கட லோர பகுதிகளில் இருந்த வீடு கள், படகுகள் முற்றிலுமாக அழிந்து விட்டன. லட்சக்க ணக்கான மீனவர்களின் குடிசை கள் டிசுனாமி அலைகளால் சுருட்டி கடலுக்குள் கொண்டு செல்லப் பட்டு விட்டன.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக நாகைமாவட்டத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

கடலூர் மாவட்டத்தில் 500 பேரும், குமரி மாவட்டத்தில் 500 பேரும் பலியாகியுள்ளனர். சென் னையில் பலியானவர்கள் எண் ணிக்கை 200 ஆக உயர்ந்துள் ளது. கடலோரங்களில் வசித்து வந்தவர்களில் பல்லாயிரக் கணக் கானவர்கள் காணாமல் போய் விட்டனர்.

அவர்களில் பலர் நேற்று கட லோரங்களில் பிணமாக கிடந்த னர். இதனால் கடல் கொந்தளிப் புக்கு பலியானவர்கள் எண் ணிக்கை மேலும் உயர்ந்தபடி உள்ளது.

நாகப்பட்டினம், கடலூர், சென் னை, கன்னியாகுமரி ஆகிய 4 நகரங்கள் தான் கடுமையாக பாதிக கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டி னம் நகரம் மயான பூமிபோல மாறிவிட்டது. அங்கு தெருக்களில் ஆங்காங்கே பிணங்கள் சிதறிக் கிடக்கின்றன.

நாகப்பட்டினம் கடலோரத்தில் தோண்டத் தோண்ட பிணங்களாக வந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் மக்களின் அழுகை ஓலமாக உள்ளது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்ற பரிதாப நிலையில் நாகை மக்கள் பிணங் களை தேடி அலைந்து கொண் டிருக்கும் காட்சி பரிதாபமாக உள்ளது.

வேளாங்கண்ணியில் கடற்கரை முழுவதும் சடலங்களாக காட்சி அளித்தது. அங்கு கடல் அலை அடிக்க ஒவ்வொரு பிணமாக கரை ஒதுங்கியபடி உள்ளது. இதனால் நாகை மாவட்டத்தில் கடல் சீற்றத்துக்கு பலியானவர் கள் எண்ணிக்கை பல மடங்கு உயரும் என்று அஞ்சப்படுகிறது.

நாகை மாவட்டத்தில் எங்கு பார்த்தாலும் சேதம் ஏற்பட்டுள்ள தால் மருத்துவமனைகளில் பிண வறைகள் நிரம்பி வழிகின்றன. அங்கு வைக்க இடம் இல்லா ததால் தெருக்களில் பிணங்களை வரிசையாக அடுக்கி வைத்தனர்.

கடலோரங்களில் மேலும் பலரது பிணம் எடுக்கப்படுவதால் பிணங்களை பிரேத பரிசோதனை செய்யாமல் புதைக்கலாம் என்று அரசு அறிவித்தது. இதையடுத்து நாகையில் நேற்று பிணங்களை உடனுக்குடன் புதைத்தனர்.

பல இடங்களில் பிணங்கள் மொத்தமாக பெரிய குழிகளில் புதைக்கப்பட்டன. விடிய விடிய நாகையில் சவ ஊர்வலம் நடந் தபடி இருந்தது.

நாகைக்கு அடுத்தபடியாக பெரும் பாதிப்பை சந்தித்துள்ள கடலூர் மாவட்டத்தில் நேற்றுக் காலை மேலும் பல பிணங்கள் கரை ஒதுங்கின. அந்த உடல்கள் கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டன.

நேற்று முன்தினம் கடலூர் மாவட்டத்தில் பலியான சுமார் 600 பேரில் பெரும்பாலானவர்களின் உடல்கள் பெண்ணையாற்றங் கரையில் 3 பெரிய குழிகளில் கொட்டப்பட்டு புல்டோசர்கள் மூலம மண் அள்ளிப்போட்டு மூடப் பட்டன. தொடர்ந்து கடலூர் மாவட்ட கடலோரத்தில் பிணங்கள் கரை ஒதுங்குவதால், அங்கு பலியா னவர்கள் எண்ணிக்கை மேலும் உயர்கிறது.

குமரி மாவட்டத்தில் உயிரிழந் தவர்கள் எண்ணிக்கை இன்று 600 ஐத் தாண்டியது. இதில் குளச்சல் துறைமுகம் பகுதியில் மட்டும் 300 பேர் கடல் சீற்றத்துக்கு உயிரி ழந்தனர்.


குளச்சல் கடல் ஓரத்தில் நேற்று முன்தினம் 240 பேரின் உடல்கள் கரைஒதுங்கின. நேற்றுக் காலை அங்கு 60 பேரின் உடல்கள் கரை களில் ஆங்காங்கே சிதறிக் கிடந் தன.

குமரி முனை கடற்பகுதியிலும் பலியானவர்கள் உடல்கள் கரை ஒதுங்கியபடி உள்ளன. பிணங் களை உடனுக்குடன் மீட்டுக் கொடுக்கின்றனர். சென்னையில் 136 பேர் கடல்சீற்றத்தால் உயிரி ழந்ததாக முதலில் வந்த தகவல் கள் தெரிவித்தன. ஆனால் நேற்று அந்த எண்ணிக்கை 190 ஆக உயர்ந்தது.

சென்னை கடலோரப் பகுதிக ளிலும் நேற்றுக் காலை முதல் பிணங்கள் கரை ஒதுங்கியபடி உள்ளன. அவை மீட்கப்பட்டு அரசமருத்துவமனைக்கு கொண்டு வரப்படுகின்றன.



இந்தியாவில்



இந்தியாவில்




இந்தோனேசியாவில்



தாய்லாந்தில்

## பேரழிவை ஏற்படுத்திய கடலடி புவிநடுக்க அதிர்வுகள்!



### கடல் கொந்தளிப்பால் பாதிப்புற்று

# பராமரிப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவசர உதவிகளை வழங்க முன்வருக!

## - உள்ளூர் மக்களுக்கு த.பு.கழகம் அழைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

**கடல் கொந்தளிப்புக் காரணமாக பாதிக்கப்பட்டு தற்காலிக பராமரிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான அவசர உதவிகளை வழங்கி உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளூர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நேற்று முன்தினம் காலை கடலில் திடீரென ஏற்பட்ட கடல்கொந்தளிப்புக் காரணமாக கரையோரப்பகுதிகள் முற்றுமுழுதாகவே அழிவடைந்துள்ளன. இதனால் அப்பகுதி மக்களின் குடியிருப்புக்கள், உடமைகள் என அனைத்துமே கடலுடன் அடித்துச்செல்லப்பட்டுள்ளன. இதன் காரணமாக அந்த மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட மக்களின் துயரை ஆற்றுவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உடனடி உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக உள்ளூர் மக்களிடம் கிராமரீதியாக, பிரதேச ரீதியாக உதவிப்பொருட்களை எதிர்பார்த்து நிற்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வித உடமைகளும் இல்லாது உடுப்பதற்கு உடைகள் கூட இல்லாத நிலையில் பராமரிப்பு நிலையங்களில் தங்கியிருக்கின்றார்கள். எனவே உள்ளூரில் வாழ்கின்ற மக்கள் ஆண், பெண், சிறுவர், சிறுமியர்களுக்கான புதிய உடுபுடவைகள், போர்வைகள், பாய், குழந்தைகளுக்கான பால்மா பொருட்கள், மற்றும் உலருணவுப்பொருட்கள் என்பனவற்றை பிரதேசரீதியாக உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளை அலுவலகங்களில் அல்லது கிளிநொச்சியில் அமைந்துள்ள புனர்வாழ்வுக்கழக நடுவப்பணியகத்திலோ வழங்கி உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை கடல் கொந்தளிப்பில் இருந்து மீட்கப்பட்ட மக்களையும், உடல்களையும் வைத்தியசாலைக்கு எடுத்து வருவதற்கு வாகன வசதிகள் போதாமல் இருப்பதனால் சிற்றூர்திகள், சிறிய, பெரிய பேருந்து வண்டிகள், பாரஊர்திகள் போன்ற போக்குவரத்து சாதனங்களை சாரதிகளுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மேற்குறித்த அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்குமாறும் வேண்டியுள்ள அதேவேளை நலன் புரி நிலையங்களிலும், வைத்தியசாலைகளிலும் தங்கியுள்ள மக்களையும், காயமடைந்தவர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப்போராளிகள், திலீபன் மருத்துவ சேவைப்போராளிகள், சுகாதாரத் தொண்டர்கள், வைத்திய சாலைப்பணியாளர்கள் ஆகியோர் இணைந்து பராமரித்து வருகின்றனர். இவர்களுடன் உதவியாக இவர்களைப் பராமரிப்பதற்கும் ஆளணிப்பற்றாக்குறை எதிர் கொள்ளப் படுகின்றது. எனவே பொது மக்கள் முன்வந்து பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளூர் மக்களிடம் வேண்டி நிற்கின்றது. (லோ,தீ)

## கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடல்கொந்தளிப்புக் காரணமாக நீரில் அடித்துச் செல்லப்பட்ட ஐந்து வயதுச் சிறுமி ஒருவர் அதிசயமாக உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த ஜிவ்றீனா என்பவரே இவ்வாறு மீட்கப்பட்டவராவார். கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி தமது பெற்றோருடன் வானில் வந்து கொண்டிருந்த வேளை கல்லடி பிரதான வீதியில் வைத்து வான் தடம் புரண்டதில் இச்சிறுமி கடல் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். பனை மரம் ஒன்றை அணைத்த படி காத்தான்குடி வாவியூடாக கரையாக்கன் தீவுக் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை பனை மரம் ஆற்றில் மிதப்பதைக் கண்ட கரையாக்கன்தீவைச் சேர்ந்த சோ.தங்கவேல், ச.கமலநாதன் ஆகிய இரு மீனவர்களும் அங்கு சென்று பார்த்த வேளை சிறுமி பனை மரத்தை அணைத்தபடி காணப்பட்டார். உடனடியாக அவர்களால் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சையின் பின் குழந்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு சர்வதேசத்திடம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அவசர வேண்டுகோள்

நில நடுக்கத்தினால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அனர்த்தத்துக்கு உடனடியாக உதவுமாறு அனைத்துலக சமூகத்திடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்வெள்ள அனர்த்தங்கள் தொடர்பான அச்சம் இன்னமும் ஓயாத நிலையில் மக்கள் தத்தமது கிராமங்களுக்கு உடனடியாக செல்ல முடியாத சூழல் நிலவுகின்றது.

தற்போது தற்காலிகமாக வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் தங்கியுள்ள மக்களிற்கு உடனடி நிவாரணம் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கும் பணி துரிதமாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கான பெருமளவு உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனைத்துலக சமூகத்திடமிருந்து எதிர்பார்க்கின்றது. அனைத்துலக ரீதியாக ரி.ரி.என் தொலைக்காட்சி மற்றும் ஐ.பி.சி தமிழ் வானொலி ஊடாக நேற்றும், நேற்றுமுன்தினமும் முன்னெடுக்கப்படும் நம்பிக்கை ஒளி நிதித்திட்டத்தின் முழு வளங்களும் தற்போது ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்குவது என தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முடிவு செய்துள்ளது. பல்லாயிரம் மக்களின் அவசர தேவை கருதி உடனடியாக செயற்பட்டு, நிதிப்பங்களிப்புக்களை வழங்குமாறு புகலிடத் தமிழர்கள், தமிழ் வணிகர்கள், பொதுநிறுவனங்கள், ஆலயங்களிடம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பகிரங்கமாக வேண்டி நிற்கின்றது.

## மட்டக்களப்பில் பாதிப்புற்ற பகுதிகளுக்கு கேணல் பானு நேரடி விஜயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக பாதிப்புற்ற பகுதிகளை மட்டு அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். அத்துடன் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் கவனித்தார்.

இவருடன் மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் உட்பட பலர் சென்றிருந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் நாவலடி, கல்லடி, காத்தான்குடி ஆகிய பகுதிகளுச்கு இவர்கள் சென்றிருந்தனர்.

## மக்கள் எழுச்சிப்போராட்டங்கள் மறுஅறிவித்தல் வரை ஒத்திவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் சிறிலங்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படையில் யாழ்.குடாநாட்டில் மக்களால் மேற்கொள்ளப் பட்டுவரும் எழுச்சிப் போராட்டங்கள் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் கொந்தளிப்பு காரணமாக தமிழீழப்பகுதிகளில் ஏற்பட்ட பெரும் இழப்புக்களின் காரணமாகவே இந்த மனிதசங்கிலிப் போராட்டம் தற்காலிகமாக மறு அறிவித்தல் வரும் வரை ஒத்திவைக்கப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (லோ,தீ)

## உலக நாடுகளின் மனிதாபிமான உதவிகள் வடக்கு-கிழக்கை சென்றடைய வழிசெய்க!

### - சிறிலங்கா அரசிற்கு வலியுறுத்து

தற்போது உலக நாடுகளால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் தமிழர்களின் தாயகப் பகுதிக்கும் சென்றடைவதற்கு ஏற்ப வழிகளைச் செய்ய வேண்டுமென்ற ஆதங்கம் கொழும்பு தமிழ்ப் பிரமுகர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறான நிலைமைகளின் போது கிடைக்கப்பெறும் உதவிகளில் தமிழர் பிரதேசங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே நோக்கப்பட்டன என்பதும், உதவிகள் சிறியளவிலேயே அனுப்பப்பட்டு வந்தன என்பதுமே இதற்கான காரணமாகும்.தமிழர் பகுதிகளில் பாதிக்கப்பட்ட பெரும்பான்மையான கரையோரப் பிரதேசங்கள் தமிழர் தரப்பின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வருவதால் இவற்றிற்கான உதவிகள் மறைமுகமாக மறுக்கப்படலாம் என்ற ஐயம் எழுப்பப்படுகிறது. குறிப்பாக இப்பகுதிகளிற்கான போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்பு வசதிகளற்றனவாக இருப்பதால் அவற்றைக் காரணங்காட்டி இவை மறுக்கப்படலாம் என்றே கருதப்படுகிறது. போர்க்காலத்தில் பெறப்பட்ட உதவிகள் பூரணமாக சிங்களப் பிரதேசங்களிற்கே செலவு செய்யப்பட்டன என்பதும், சமாதான சூழ்நிலை ஏற்பட்டு மூன்று வருடங்களான போதும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் இன்று கூட அபிவிருத்தி நடவடிக்கைகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளதோடு, அப்பகுதிவாழ் மக்களும் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நோக்கப்பட்டு பல அவஸ்தைகளிற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். அண்மையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது அவசர உதவிகளிற்கான அழைப்பு அரச அதிகாரிகளாலும், பாராளுமன்ற உறுப்பினர்களாலும் விடுக்கப்பட்ட போது அவை அரசால் உதாசீனப்படுத்தப்பட்டதோடு, அரச அதிகாரிகள் அத்தியாவசிய நிவாரணத்திற்குத் தேவையென கேட்ட தொகையைக் கூட கொடுக்க அரசு மறுத்துவிட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே தற்போது கிடைக்கப்பெறும் உதவிகளில் ஓரளவாவது தமிழர் பிரதேசத்தைச் சென்றடைய புலம்பெயர்ந்த தேசங்களில் வதியும் தமிழர்கள் தத்தமது நாடுகளின் அரசியல்வாதிகளைத் தொடர்பு கொண்டு, அந் நாடுகளினூடாக சிறிலங்காவிற்கு இராஜதந்திர அழுத்தத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதே சிறந்த வழி என்பதே மேற்படி தமிழ்ப் பிரமுகர்களின் கருத்தாகும். இதேவேளை தமிழ்ப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்து மகிழ்ச்சி கலந்த கருத்துக்களையே சிங்களப் பேரினவாதிகளும் அவர்கள் சார்ந்த கட்சிகளும் வெளிப்படுத்துவதையே சிங்கள ஊடகங்கள் கொழும்பில் எந்தவித தயக்கமுமின்றி வெளியிட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### – கடல் கொந்தளிப்பில் சிக்குண்ட –

## இராணுவச் சிப்பாய் புலிகளால் காப்பாற்றப்பட்டு ஒப்படைப்பு

வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கரையேறிய சிறிலங்கா படைச் சிப்பாய் ஒருவரை விடுதலைப் புலிகள் மீட்டு சிறிலங்கா அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்லடி சிறிலங்காப் படை முகாமைச் சேர்ந்த ஏ.டி.வசந்த என்ற இராணுவச் சிப்பாயே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவராவார். இதேவேளை கடல் பெருக்கெடுத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சிறிலங்கா படைத்தரப்பு வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியிருந்தனர்.


## மன்னார் கரையோரப் பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

இயற்கை அனர்த்த நிலைமைகளைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் அரிப்பு சிலாபத்துறை ஆகிய மீனவக் கிராமங்களில் இருந்து 900 யிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் வெளியேறி வருகின்றன.

இடம்பெயர்ந்தோர் முருங்கன் ஜீவோதயம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கரையோர கிராமங்களான தாழ்வுப்பாடு, வங்காலை, பள்ளிமுனை, உப்புக்குளம், சாந்திபுரம், ஆகிய கிராமங்களில் இருந்து வெளியேறிய மக்கள் புத்தளம் கற்பிட்டி, மடு, வவுனியா பிரதேசங்களை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர் என அங்கிருந்து கிடைக்கின்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. கடல் நடுக்கத்தால் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் கிழக்கு கரையோரப் பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் கடற்கரையோரம் கடல் கொந்தளிப்பு சிறிதளவில் காணப்படுவதினை தொடர்ந்தே பாதுகாப்பிற்காக கரையோர மக்கள் வெளியேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை நகரில் பேரலைகள் விளைவித்த கோரம்


















படங்கள்:கலாவரன்

# கணப்பொழுதில் ஆயிரக்கணக்கானோரின் உயிர் குடித்த கடற்கொந்தளிப்பு

கிளிநொச்சி நகரவீதியில் என்றுமில்லாதவாறு அம்பியுலன்ஸ் வண்டிகள் வேகமாக கூவல் ஒலி எழுப்பியவாறு அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தன. நாங்கள் என்ன அனர்த்தம் என்பதை அறிவதற்காக வைத்தியசாலைக்குச் சென்றோம். நேரம் 9.30 மணி இருக்கும். "கடல்கொந்தளிப்பாம் கன சனம் கடலோட போட்டுதாம் அதுதான் நாங்கள் அங்க போறம்'' என்று சொல்லிக் கொண்டே அம்பியுலன்ஸ் சாரதி தனது வாகனத்தை வேகமாக இயக்கிக்கொண்டு சென்றார். நாமும் உடனடியாகவே வடமராட்சி கிழக்குப்பகுதி நோக்கி எமது உந்துருளியை வேகமாக ஓட்டிச்சென்றோம். ஏ-9வீதி ஊடாக நாம் பயணிக்கின்ற போது எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த பெருமளவான வாகனங்கள் அபாயத்தை வெளிப்படுத்தும் வகையில் ஒளிபாய்ச்சியவாறு கிளிநொச்சி வைத்தியசாலையை நோக்கிச்சென்றுகொண்டிருந்தன. நாங்கள் புதுக்காட்டுச்சந்தியைச் சென்றடைந்தோம். அங்கே பெருமளவான மக்கள் கூடிநின்று கதறி அழுதுகொண்டிருந்தார்கள். அவர்களின் முகபாவனை பேரனர்த்தத்தின் தன்மையை வெளிப்படுத்தியது. இவர்களின் கைகளில் எதுவுமே இருக்கவில்லை. வெறுங்கையுடன் நின்று கதறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நிகழ்ந்தது என்ன? இப்போது நிலைமைகள் எப்படி? என்பவற்றை அறிவதற்காக அங்கு கூடிநின்ற 41 வயதுடைய பிரான்ஸ்கிங் என்பவருடன் உரையாடினோம்.

"ஐயா என்ன நடந்தது" என்று அவரிடம் மென்மையாக வினாவினோம். அவர் புலம்ப ஆரம்பித்து விட்டார். ஐயோ நான் என்னத்தைச் சொல்லுவன். என்ர கடல் இப்படிச்செய்துபோட்டுது. என்ர பிள்ளைகள் எல்லாம் எங்க? என்ன காலம் எங்களுக்குப் பிடிச்சுது? என்று கதற ஆரம்பித்து விட்டார். அவர் எதையும் சொல்லவில்லை. இது ஏதோ நிலைமை கடுமை என்பதை உணர்த்தியது.

நாங்கள் எவ்வித தாமதமும் இல்லாமல் தாழையடி கடல் கரைநோக்கிப் போய்க்கொண்டிருந்தோம். மக்கள் கதறி அழுது கொண்டு வீதியால் ஓடிக்கொண்டிருந்தார்கள். மருதங்கேணி வைத்தியசாலைக்குச் சென்றோம். அங்கு சடலங்கள் குவிந்திருந்தது. பாலகர்கள், சிறுவர்கள், பெண்கள், யுவதிகள்,, இளைஞர்கள், வயது முதிர்ந்தவர்கள் என அனைத்து தரப்பினரதும் சடலங்கள் அங்கு அடுக்கப்பட்டிருந்தன. வைத்தியர்கள் எவரும் அங்கு இருக்கவில்லை. இறந்த தனது பச்சிலைம்பாலகர்களைத் தூக்கி முத்தமிட்டுக் கதறிக்கொண்டிருந்தார்கள். ஒருதாய் இது ஒன்று.



இப்படிப்பல சம்பவங்கள் வைத்தியசாலையில் நெஞ்சை உருக்கியது.

எங்கும் விடுதலைப்புலிகளின் போராளிகளும், தமிழீழக் காவல் துறையினரும் நின்றுகொண்டிருந்தனர். வைத்தியசாலையைத் தாண்டி கடற்கரை நோக்கிச் சென்றோம். கடற்கரையில் இருந்து 500 மீற்றர் தூரத்திற்கு கடல் நீர் குடிமனைக்கு உட்புகுந்திருந்தது. கடற்கரையில் நிற்கவேண்டிய மீன்பிடிப் படகுகள், கட்டுமரங்கள், வீட்டின் ஓடுகள், தடிகள் குப்பைகள், மரங்களின் கிளைகள் எனப் பெருமளவான அடசல்கள் குவிந்திருந்தன. அதனையும் தாண்டிச்சென்ற போது இரண்டு உழவு இயந்திரங்கள் வீதியில் இருந்து சற்றுத்தூரத்தில் தடம் புரண்டிருந்தது. அதனைப் பார்த்துக்கொண்டு புகைப்படம் எடுத்தபோது அருகில் நின்ற இளைஞர் ஒருவர் கூறினான். "இது இரண்டும் கடற்கரையில் இருந்த மரத்திற்குக்கீழ் நிறுத்தியிருந்தது. இப்ப இவ்வளவு தூரத்திற்கு வந்திட்டு" என்றான்.



அதற்கப்பால் சென்று பார்த்த போது கட்டடம் எதுவும் இருக்கவில்லை. வெறும் வெட்டை வெளியாகவே கடற்கரையோரம் முழுவதும் காணப்பட்டது. அங்கிருந்த கட்டடங்கள் அனைத்தும் தரைமட்டமாக இருந்தது. எவரையும் காணவில்லை. பலமான காற்று வீசிக்கொண்டிருந்தது. கரையில் நிற்பதற்கே அச்ச நிலை காணப்பட்டது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் இருந்த கட்டடங்கள் எவையும் அங்கு இப்போது இல்லை. சில கட்டட இடிபாடுகளுக்குள் சடலங்கள் சிக்கியிருந்தன. கடற்கரையில் நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டு நின்றேன். சற்று நேரத்தில் யாரோ ஓடிவா ஓடிவா எனக் கத்தியது கேட்டு திரும்பிப்பார்த்தேன். அனைவரும் ஓடிக்கொண்டிருந்தார்கள். ஒரு அலை வேகமாக கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது நானும் ஓடினேன். அலை கரையைத் தாண்டி 50 மீற்றர் தூரம் வரை மெதுவாக வந்தது. அப்படிக்கடல் நீர் அடிக்கடி வந்துகொண்டிருந்தது.


இப்போது இந்தக் கடல்கொந்தளிப்பில் சிக்கித் தப்பிய இளைஞன் ஒருவரைச் சந்தித்தோம்.

காலை 9.00 மணி இருக்கும். திடீரென கடலில் பாரிய வெடிச் சத்தம் கேட்டது. நாங்கள் முழக்கம் என்று நினைச்சம். ஆனால் அந்தச் சத்தத்தைத் தொடர்ந்து பெரிய இரைச்சல் ஒன்று கரையை நோக்கி வந்து கொண்டிருந்தது. "கிபிர்" வருவது மாதிரியான அந்தச் சத்தம் எம்மைப் பயம்கொள்ள வைக்கவே உடனே நான் வீட்டுக்குவெளியால வந்து பார்க்கிறதுக்கிடையில் கடலலை எமது வீட்டை அடித்துத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தது. எங்க வீட்டில கழுத்துக்கு மேல தண்ணி வந்து அலை அடித்துக்கொண்டு இருந்தது. எமது வீட்டில் அம்மாவும், அண்ணாவும் இருந்தார்கள். நான் உடன பக்கத்தில இருந்த கட்டுமரம் ஒன்றை மரத்தில கட்டிப்போட்டு அதில அம்மாவை ஏத்திவிட்டன். அண்ணாவுக்கு முட்டுவாறது. அண்ணாவ வீட்டுக் கூரையில ஏற்றிவிட்டன். அதனால தான் அம்மாவையும் அண்ணாவையும் காப்பாற்ற முடிந்தது.", இது தாழையடிப்பகுதியில் இடம் பெற்ற கடல் கொந்தளிப்பில் இருந்து உயிர் தப்பிய அந்த இளைஞனின் வாக்கு மூலம்.

முற்றாகச் சிதைந்து அழிந்து போய் உள்ள தாழையடி கடற்கரை கிராமம் வரலாறு காணாத சோகத்தைத் தாங்கியிருந்தது. ஒவ்வொரு குடும்பத்திலும் பெரும்பாலும் உயிரிழப்புக்கள் இடம் பெற்றிருந்தன. சில குடும்பங்கள் முற்றாக கடலிற்குப் பலியாகிய நிலையும் காணப்படுகின்றது.

இறந்த தமது உறவுகளின் சடலங்களை கட்டியழும் தாழையடி மக்களின் துயர் நிலை கல் நெஞ்சையும் கரையவைக்கும் துயரச்சம்பவமாக இருந்தது. தாழையடி மருத்துவ மனையில் ஒரு தாய் தனது இறந்துபோன பச்சிளம் பிஞ்சை மடியில் வைத்து அழுதுபுலம்பும் காட்சி மற்றும் குடும்பத்தில் தனது அனைத்து உறுப்பினர்களையும் இழந்து அழுதுபுலம்பியவாறு தனது பிள்ளைகளின் சடலங்களை தானே மீட்டெடுக்கும் துயர் நிறைந்த காட்சிகள்....... எனத் தொடரும் அந்தக்கொடும் சம்பவங்கள் கடல் மீது வெறுப்பை ஏற்படுத்துகின்றன.

தாழையடிப் பிரதேச வாசி ஒருவரின் தகவலின்படி பொது மண்டபமொன்றில் கலை நிகழ்ச்சி பழகிக்கொண்டிருந்த 25 இற்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர்களில் பெரும்பாலானவர்களின் நிலை என்ன என்பது தெரியாதுள்ளதாக தெரிவித்தார். அவர் குறிப்பிட்ட கட்டடம் முற்றாகச் சிதைந்து காணப்படுகின்றது. மற்றும் ஒரு சம்பவத்தில் நாவலடிப்பகுதி தேவாலயம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்கள் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. குறிப்பிட்ட தேவாலயம் முற்றாக சிதைந்து காணப்படுகின்றது.



அடுத்ததாகக் கணபதிப் பிள்ளை சிறிஸ்கந்தராசா என்ற 53 வயதுடைய உடுத்துறை வாசி சம்பவம் பற்றிக்கூறுகையில்; நான வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். எனது மகள் (ராஜினி 25 வயது) எனக்குச் சாப்பாட்டைத் தந்துவிட்டு வீட்டினுள்ளே போனாள். திடீரென்று ஒரு வித்தியாசமான சத்தம் கேட்டது. என்ன சத்தம் என்று எனது மகளிடம் நான் கேட்க அவள் சொன்னாள் அது இந்தியன்ர மிராஜ் வந்து புது ஆயுதத்தால் அடிச்சிட்டுப் போட்டுது போல என்றாள். எனக்குப் பயம் வந்துவிட்டது. வெளியால் வந்தேன் என்ன பயங்கரம் கடல் பனைக்கு மேலாக உயர்ந்து வந்துகொண்டிருந்தது. அதற்கு மேலாக மீன்பிடிப் படகுகளும் கட்டுமரங்களும் வேகமாக கடல் நீருக்கு மேலாக வந்து நிலத்தில் வீழ்ந்தது. நான் எனது பிள்ளையை கூட்டிக் கொண்டு ஓடினேன் அதற்கிடையில் கடல் எங்களை மூடிவிட்டது. நான் என்ரபிள்ளையை பிடிச்சுக் கொண்டு கடலுடன் இழுபட்டுச் சென்றேன். ஒரு மரத்தின் மேல் கொப்பு எனது கையில் பிடிபட்டது. அதை ஒருகையிலும் மகளை ஒருகையிலுமாகப் பிடிச்சுக் கொண்டு நின்றேன். கடல் நீருக்குமேலாக வள்ளங்கள் தடிகள் வேலிகள் கட்டுமரங்கள் வீட்டுக் கூரைகள் முட்கம்பிகள் எனப் பெருமளவான பொருட்கள் அடித்துச்செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு முட்கம்பிச் சுருள் எனது காலில் சிக்கிவிட்டது. அது கடற் சுழியால் சுற்றிக் கொண்டிருக்கிறது. எனது கால் சதைகள் கிழிந்து கொண்டிருந்தது. இந்நிலையில் வேதனையை என்னால் தாங்கமுடியவில்லை பிள்ளையா அல்லது எனது காலா என்ற போராட்டம் நான் பிள்ளையை இறுகப்பிடித்தேன் இந்த நிலையில் ஒரு கட்டுமரம் வந்து எனது கையில் அடித்தது அத்துடன் பிள்ளை பறிபோய் விட்டாள் கண்முன்னால் எனது பிள்ளை கடலில் அடிபட்டுப் போனாள் என்று விம்மினார் அவர்.


அப்படியே சோகத்தின் கதைகளைப் பதிவு செய்து கொண்டு குடியிருப்புப்பகுதிகளுக்குள் நகர்ந்தோம். ஒரு வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த சிற்றூர்தி ஒன்று நான்கு வீடுகள் தாண்டி ஒரு பனையுடன் மோதிய நிலையில் சுருண்டுபோய்க் கிடந்தது. வீதித் திருத்தப்பணிக்காக வீதியில் நிறுத்தப்பட்டிருந்த "கல்லுநெரிக்கும் டோசர்'' நூறு மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு பாடசாலைக்கட்டடத்துடன் மோதுண்டு தடம்புரண்டு காணப்பட்டது. கடற்கரை ஓரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மதகுரு ஒருவரின் வாகனம் நீண்ட தூரத்துக்கு அப்பால் மரத்துடன் மோதுண்டு காணப்பட்டது. வீடுகள் தரை மட்டமாகி சிதறியிருந்தன. கரையோரக் கிராமமே வெறிச்சோடிக் காணப்படுகிறது. எங்கும் மரண ஓலம் கதறல்கள் கண்ணீர்களுடன் மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறனர்.

பல குடும்பங்கள் குடும்பமாகவே கடலுக்கு இரையாகி விட்டார்கள். சில குடும்பங்களில் ஒருவர் தப்பியதும் எனப் பெரும்பாலும் அனைத்துக் குடும்பங்களுமே உறவுகள் யாரையாவது பிரிந்திருக்கிறார்கள். அனைவரது குடும்பங்களையும் மரணம் தொட்டுச சென்றிருக்கிறது. யாராலுமே தப்பி இருக்கமுடியவில்லை. கணப்பொழுதுக்கிடையில் 1000 திற்கும் அதிகமானவர்களின் உயிரை கடல் குடித்துவிட்டது. பெற்றோரை இழந்த பிள்ளைகளும் பிள்ளைகளை இழந்த பெற்றோரும் யாருமே இல்லை என்று பலருமாக பலரை உறவுகள் அற்றவர்களாக நிர்க்கதியில் விட்டுச் சென்று விட்டது. இந்தக் கடல் தமிழ்மக்கள் என்றுமே இத்தகைய அவலத்தை சந்தித்ததில்லை. ஆனால் முதல் முதலாக நிகழ்ந்த இந்த அனர்த்தம் தமிழ் மக்கள் அனைவரது இதய ஆன்மாவை உலுக்கிவிட்டுச் சென்றிருக்கிறது.

அ.லோகீசன்
துஷ்யந்தன்

# முல்லைத்தீவு–வடமராட்சி கிழக்கு சாவடைந்தோர் நல்லடக்கம்!

## செந்தளிர் சிறார்களின் உடல்கள் நல்லடக்கம்!



(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு பகுதியில் பராமரிக்கப்பட்டு வந்த செந்தளிர் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பரிதாபகரமாக இறந்த 13 சிறார்களின் சடலங்கள் புதுக்குடியிருப்பில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

செந்தளிர் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இறந்த 13 சிறார்களின் சடலங்கள் வள்ளிபுனம் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் அஞ்சலி நிகழ்விற்காக வைக்கப்பட்டு பின்னர் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஏனைய பொதுமக்களின் சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நேற்று மாலை அடக்கம் செய்யப்பட்டுள்ளது.


நேற்றைய இந்த சிறுவர்களின் நல்லடக்க நிகழ்வில் தளபதி கேணல் விதுஷா, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, துணை மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கீதா, மாவீரர் பணிமனை மகளிர் பொறுப்பாளர் அர்ச்சனா ஆகியோர் கலந்துகொண்டு தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்து உரிய முறையில் தகனம் செய்து வைத்துள்ளனர். இந்த சிறார்களின் சடலங்களைப் பெருமளவான பொதுமக்கள் சென்று பார்வையிட்டு அஞ்சலி செய்துள்ளனர். (கு)

## 300இற்கு மேற்பட்ட சடலங்கள் புதுக்குடியிருப்பில் அடக்கம்!

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட சடலங்களில் 300இற் கும் மேற் பட்டவை நேற்று உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டன.

புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் நேற்று முன்தினம் மாலை வரையும், நேற்றுக் காலை வரைக்கும் எடுத்துவரப் பட்ட சடலங்கள் யாவும் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையினரும், அரசியல்துறையினரும் இணைந்து ஒட்டுசுட்டான் வீதியில் அமைந்துள்ள ஐயனார் கோவிலுக்கு அண்மையில் அடக்கம் செய்துள்ளனர்.



இச்சடலங்களில் உறவினர்களால் இனம் காணப்பட்ட 90 சடலங்களில் 30 சடலங்களையும் ஏனைய 240 வரையான சடலங்களை மேற்படி இடத் திலும் அடக்கம் செய்துள்ளனர். இனம் காணப்பட்ட சடலங்கள் 50இற்கு மேற்பட்டவை உறவினர்கள் எடுத்து சென்று அடக்கம் செய்துள்ளனர். இந்த சடலங்கள் அடக்கம் செய்வதற்குப் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத்தினரும் பெரும்பாலான உதவிகளை மேற்கொண்டுள்ளனர். இனம் காணப்பட்ட சடலங்களின் பெயர் விபரம் அனைத்தும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் உள்ளது. (கு)

## வடமராட்சி கிழக்கில் உயிரிழந்தோர் உடுத்துறையில் அடக்கம்



(அலுவலக செய்தியாளர்)

கடல்பெருக்குக் காரணமாக உயிரிழந்த வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் உடல்கள் உடுத்துறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.


கடல் கொந்தளிப்புக் காரணமாக உயிரிழந்தவர்களில் இதுவரை மீட்கப்பட்ட 300இற்கும் அதிகமான சடலங்களே இவ்வாறு தனித் தனியான முறையில் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வாறு அடக்கம் செய்யப்பட்ட உடல்களில் சிலவற்றைத் தவிர பெருமளவானவை இனங்காணப்படவில்லை. இதனால் அனைத்து உடல்களும் தமிழீழ விடுதலைப்புலிகளால் புகைப்படம் பிடிக்கப்பட்டு அதற்குரிய ஒழுங்கு முறையிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இனங்காணப்பட்ட சடலங்கள் சில அவர்களின் உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் போராளிகள், அரச அதிகாரிகள், மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், கிராமமக்கள் எனப் பெருமளவானவர்கள் பங்கு கொண்டிருந்தனர். சடலங்கள் மீட்கப்படுகின்ற நிலையில் தொடர்ந்தும் குறித்த இடத்தில் புதைக்கப்படும் எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)


## முள்ளியவளைப் பகுதியில் 200 சடலங்கள் நல்லடக்கம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு நகர்ப்பகுதியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களில் 200 இற்கும் மேற் பட்டவை முள்ளியவளைப்பகுதியில் உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.



முள்ளியவளை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப் பட்ட சடலங்களில் 200இற்கும் மேற்பட்ட சடலங்களில் உறவினர்களால் இனங் காணப் பட்டவற்றையும் ஏனைய சடலங்களையும் முள்ளிய வளை கற்பூரப் புல்வெளி மயானத் தில் அடக்கம் செய்துள்ளனர்.



நேற்றுக்காலை முதல் மாலை நேரம் வரை மேற்கொண்ட நடவடிக்கை மூலம் கிடைக்கப்பெற்ற சடலங்கள் அனைத்தும் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் உறவினர்களால் இனம் காண முடியாத அளவிற்கு சீர்குலைந்த நிலையிலும் சில சடலங்கள் குடும்பம் குடும்பமாக காணப்படுவதால் உறவினர்கள் யாரும் அற்ற சடலமாகவும் காணப்பட்டன.

முள்ளியவளைப் பகுதியில் அடக்கம் செய்யப்பட்ட பெரும்பாலான சடலங்கள் கள்ளப்பாட்டு கிராம மக்களின் குடும்பங்களின் சடலமாகும்.

அடக்கம் செய்யப்பட்ட சடலங்கங்கள் அனைத்தும் அவர்களின் தோற்றம், அண்ணளவான வயது , அணிந்திருந்த உடைகள், ஆபரணங்கள் என்பனவற்றின் விபரம் எடுக்கப் பட்டேஅடக்கம் செய்யப்பட்டன.

இந்த அடக்கம் செய்யும் நடவடிக்கையில் அப்பகுதி கிறிஸ்வத பாதிரிமார்கள், அரசியல்துறையினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு உரிய முறையில் நடவடிக்கைகளை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்றுள்ள மக்களுக்கு மனிதாபிமானத்துடன் உதவிபுரிக

### பொது மக்களுக்கு யாழ். ஆயர் அழைப்பு

தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை வருமாறு: சற்றும் எதிர்பாராத விதமாக நடந்த இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட கொடூரம் பற்றி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். இந்தத் தேசிய இயற்கை அனர்த்தம் பல ஆயிரக்கணக்கான உயிர்களை பலி கொண்டுள்ளது. இதில் கணிசமான தமிழ் மக்கள் இறந்து போயுள்ளமை இன்னும் வேதனையளிக்கின்றது. ஆசியா முழுவதிலும் நடந்த இந்த அழிவிற்காக எமது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் ஆன்மா இறைவனில் அமைதியடைய வேண்டுகின்றோம். உயிர்களையும் உடமைகளையும் இழந்து யாருமற்ற நிலையில் அகதிகளாகவும், அநாதைகளாகவும் இருப்போரின் துன்பத்தில் கலந்து அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நடந்து முடிந்தவற்றை இறை சித்தம் என மன உறுதியுடன் ஏற்கும்படி சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகின்றோம். இனியும் இது போன்றதொரு துயர சம்பவம் நடைபெறாமல் இருக்க இறைவனை வேண்டுகின்றோம். நத்தார், புதுவருட திருவிழாக் காலத்தில் நடந்த இந்த அதிர்ச்சிகரமான சம்பவம் மறக்க முடியாத சம்பவம். இக் கால கட்டத்தில் எமது நல்ல மனதையும், மனிதாபிமானத்தையும், உதவும் பண்பையும் நாம் காட்ட வேண்டும் கொண்டாட்டங்களை தவிர்த்து பரிசில்கள், வாழ்த்து மடல்கள், கை விசேடங்கள் ஆகியவற்றை தவிர்த்து துன்பப்படுபவர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கி உதவுவோம். எம்மால் இயன்ற பணம் மற்றும் சீரா உதவிகளை வழங்குவோம். தாராளமான உதவிப் பணிகளை செய்யுமாறு பதவிகளில் இருப்போரையும், மனிதாபிமானப் பணிபுரியும் படி அனைத்து மக்களுக்கும் அன்பு வேண்டுகோள் விடுக்கின்றேன். உடனடி மீட்புப் பணிகளில் ஈடுபட்ட விடுதலைப் புலிகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரையும் பாராட்டுகின்றோம். திடீர் உதவிகள், இரத்ததானம் போன்ற பணிகளில் ஈடுபடுமாறு குறிப்பாக இளைஞர்களை வேண்டிக் கொள்கின்றோம். இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற் கொந்தளிப்பினால் 'பராக்கிரமபாகு' காலி துறைமுக கடற்பகுதியில் மூழ்கியது

## - மேலும் பல கடற்கலங்கள் கடலில் மூழ்கின

(கொழும்பு)

கடல் கொந்தளிப்புக் காரணமாக சிறிலங்கா கடற்படையினரின் பராக்கிரமபாகு போர்க்கப்பல் காலி துறைமுக கடற்பகுதியில் மூழ்கியுள்ளது. திருமலையில் கண்காணிப்பில் ஈடுபட்ட மூன்று கடற்படைக் கப்பல்களும் வேறு கலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக திருகோணமலை சீனன்குடாவில் அமைந்துள்ள சிறிலங்காவின் வட-கிழக்குப் பிராந்தியக் கடற்படைத்தளத்திற்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. எனினும் இது குறித்த விபரங்களை படைத்தரப்பு வெளியிடுவதை முற்றாகத் தவிர்த்துள்ளது. அதேபோல் வடக்கில் காங்கேசன்துறை, காரைநகர்த் தளங்கள் பாரிய சேதம் அடைந்திருப்பதாகவும் பல கலங்கள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இருந்த போதிலும் இந்தியா தமது கடற்படையின் தேவைகளிற்காக உடனடியாக போர்க் கப்பல் ஒன்றை வழங்குமாறு சிறிலங்கா அரசு கோரியிருப்பதாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளதுயாழ்ப்பாணத்தில் சிறிலங்கா இராணுவம் வெளியிட்ட தகவலின் படி அவர்களின் 51-1ஆம் 51-4ஆம் 51-5ஆம் பிரிகேடுகளிற்கு பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. கிழக்கில் கல்குடா, கஜவத்தை, கல்லடி மாங்கேணி இராணுவ முகாம்களும் அறுகம்பை, பானமை உட்பட்ட அம்பாறை மாவட்டத்தின் நான்கு விசேட அதிரடிப்படை முகாம்களும் தரைமட்டமாகியுள்ளன. அத்தோடு கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த காவலரண்கள், கண்காணிப்பு முகாம்கள் என்பன கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சுமார் 400ற்கும் மேற்பட்ட படையினர் பலியானதாக தகவல்கள் கசிந்துள்ள போதும் இது பற்றிய உண்மை விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

# நோர்வே, ஐரோப்பிய யூனியன் நாடுகள் பாதிப்புற்றோருக்கு உதவ முன் வருகை

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவுவதற்குநோர்வே மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் முன் வந்துள்ளன. நோர்வே 160 மில்லியன் ரூபாவும், ஐரோப்பிய யூனியன் 4 மில்லியன் யூரோ நாணயத்தையும் வழங்க முன் வந்துள்ளது. இந்தியா நான்கு கப்பல்களில் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. இதனைத் தவிர இந்தியா மீட்புப் பணிகளுக்காக 6 கடற்படைக் கப்பல்களையும் 6 உலங்கு வானூர்திகளையும் அனுப்பி வைத்துள்ளது. இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக வெளிநாட்டு பிரஜைகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சூரிச்சிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட எயார் லங்கா விமானம் கொழும்பு வர முடியாத நிலையில் நேற்று முன்தினம் மாலை தீவில் தரித்து நின்றது.

மாத்தறை சிறைச்சாலை இடிந்து வீழ்ந்துள்ளதால் அதற்குள் சிக்கிய 12 சிறைக் கைதிகள் மீட்கப்பட்டு தற்போது பாதுகாப்பான இடம் ஒன்றிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.




முல்லைத்தீவு அளம்பிலைச் சேர்ந்த கபிலஸ் திலகம் தம்பதிகளின் ஏகபுதல்வி சனுஜா (சனு) தனது முதலாவது பிறந்த தினத்தை 28.12.2004 அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை இவரது பெற்றோர்களும், ஒட்டுசுட்டானில் இருக்கும் அம்மம்மா பொன்னம்மா, மாமாமார்கள், பெரியம்மாமார்கள், அப்பப்பா, அப்பம்மா, மாமா ரங்கன் ஆகியோர் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
புதுக்குடியிருப்பு (5076) மாமா ரங்கன்

## பங்களாதேஷ் கப்பல் கடலில் மூழ்கியது

கொழும்பு துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் கப்பலொன்றும் கடலில் மூழ்கியுள்ளது. மேலும் அதிகாரி உட்பட 15 மாலுமிகள் காணாமல் போயுள்ளார்கள்

ஹிக்கடுவை, தங்காலை, நிலாவெளி, கல்குடா, அறுகம்பை ஆகிய இடங்களிலுள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களில் தங்கியிருந்த 50இற்கும் மேற்பட்ட உல்லாசப் பயணிகள் மரணமடைந்துள்ளார்கள் அல்லது காணாமல் போயுள்ளார்கள் என தெரியவருகின்றது.

# நினைவு அஞ்சலி -28-12-2004

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதாரத் தொண்டராக சேவையாற்றும் செல்வி சி.தயாளினி அவர்களின் தந்தையார் அமரர் வீரகத்தி சிவானந்தம் அவர்கள் அமரத்துவமடைந்த 31ஆம் தினத்தில் அன்னாரை நினைவு கூருவதுடன் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம் .

சுகாதார வைத்திய அதிகாரியும்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்
கிளிநொச்சி.

தகவல்:சு.க.தர்மகுலசிங்கம்
தலைவர்,
நலன்புரிச் சங்கம்.

(5445)

# முக்கிய அறிவித்தல்

## வருடாந்த பொதுக்கூட்டம்-2004

எதிர்வரும் 2004.12.30 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும். நெறியாளர் குழு உறுப்பினர்களையும் தவறாது இப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

தலைவர்
கி.பாஸ்கரன்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

செயலாளர்
க.சி.மணியம்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

(சி.10993)

# சாவு அறிவித்தல்

முல்லைத்தீவுக் கச்சேரியில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி. ஜெயசிறி சிவஜெயந்தன் அவர்களும் அவரது இரு பிள்ளைகளான அபிசேகன், சங்கீர்த்தனா ஆகியோர் முல்லைத்தீவுக் கடல் கொந்தளிப்பில் அகப்பட்டு 26-12-2004 ஆம் திகதி அகால மரணமடைந்துள்ளனர்.

இவர்கள் முல்லைத்தீவுக் கச்சேரியில் கடமையாற்றும் சிவப்பிரகாசம் சிவஜெயந்தன் அவர்களின் அன்பு மனைவியும், பிள்ளைகளும், பாலசிங்கம் நாகரத்தினம் தம்பதியினரின் புதல்வியும் , பேரப்பிள்ளைகளும், ஓய்வு பெற்ற அதிபர் சிவப்பிரகாசம் தம்பதியினரின் மருமகளும், பேரப்பிள்ளைகளும், ஜெயந்தி, ஜெயக்கனேஸ், ஜெயப்பிரகாஸ் யாழ்.பல்கலைக்கழகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மருமக்களும், வைத்தியக் கலாநிதி சிவமோகன், சிவரஞ்சன் ஆசிரியர் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், சிவதர்சன், கிழக்குப் பல்கலைக்கழகம், சிவதர்சினி ஆகியோரின் மைத்துனியும், பெறாமக்களுமாவார்கள்.

இவர்களது ஈமைக்கிரிகைகள் இன்று 28-12-2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் சிவப்பிரகாசம் அவர்களது இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்.
சிவஜெயந்தன்
கணவர்.

# சுண்டிக்குளம் முதல் தொண்டமனாறுவரை பாரிய இழப்பு
# மருதங்கேணிப் பிரதேசத்தில் ஆயிரம் பேர் பலி

-யாழ்.அரசாங்கஅதிபர் தெரிவிப்பு

**யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரையில் சுண்டிக்குளம் தொடக்கம் தொண்டமனாறு வரையிலான பிரதேசம் பாரிய உயிர் மற்றும் சொத்தழிவுகளை சந்தித்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசஅதிபர் பத்மநாதன் தெரிவித்தார்.**

உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் பொறுத்தவரையில் சுண்டிக்குளத்தில் இருந்து மணற்காடு வரையிலான பிரதேசம் மிகவும் மோசமானதாய் பாதிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்கள்,காணாமல் போனோர் தவிர ஏறக்குறைய 14000 மக்கள் அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து பளை மகாவித்தியாலயத்திலும் வேறு பாடசாலைகளிலும் தாங்கியுள்ளனர்.

மணற்காட்டு பிரதேச மக்கள் வரணிமகா வித்தியாலயத்திலும், ரிபேக் கல்லூரி. தென்னிந்திய திருச்சபை மண்டபம் என்பவற்றில் தங்கியுள்ளனர்.

மணற்காடுதொடக்கம் தொண்டமனாறு வரையான கரையோரப் பிரதேசமும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் மட்டும் நேற்று முன்தினம் கிடைத்த தகவலின் படி 65 பேர் உயிரிழந்ததாக மந்திகை வைத்தியசாலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்தோரில் ஏராளமானோர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.அத்துடன் கடல் கொந்தளிப்புக் காரணமாக ஊரணி வைத்திய சாலையில் செயற்பாடுகளும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது..

ஊரணியில் இருந்து முனை வரையான பிரதான வீதி பாவனைக்கு உதவாத வகையில் கட்டடங்கள் இடிந்து பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இது வரை மருதங்கேணிப் பிரதேசத்தில் மாத்திரம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் பலரின் உடல்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களால் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆங்காங்கே புதைக்கப்பட்டு வருகின்றன.

சில சடலங்கள் அயலவர்களால் அடக்கம் செய்யப்பட்டன. பலர் குடும்பம், குடும்பமாக அழிக்கப்பட்ட நிலையில் அவர்களது விபரங்களை திட்டுவதில் மீட்புப் பணியாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதனால் இறந்தவர்கள் காணாமல் போனோரின் விபரங்களை பூரணமாக திரட்ட நீண்ட காலம் எடுக்கும் எனவும் .அவர் மேலும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது மனிதாபிமான உதவிகளே செய்யப்பட்டு வருகின்றன.

இவ் அனர்த்தம் ஏற்பட்டு தற்போது 24 மணிநேரமே கடந்துள்ளது. அதற்கிடையில் பாதிப்புக்களை கணிப்பிடுவதோ, நஷ்டஈடுகளை ஒழுங்கு செய்வது என்பது கஷ்டம் .இது இலங்கை முழுவதுக்குமான ஒட்டுமொத்த அழிவு. இது தொடர்பாக அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் போது கலந்துரையாடி அதற்கான செயற்பாடுகளை எடுப்பேன் எனவும் அரச அதிபர் தெரிவித்தார். (லோ,28)

## கிளிநொச்சி மருத்துவமனையில் காயமடைந்த 475 பேர் சிகிச்சை பெறுகின்றனர்


(அலுவலக செய்தியாளர்)

நேற்று முன்தினம் தடீரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு காரணமாக ஏற்பட்ட அழிவினுள் சிக்கியநிலையில் காயங்களுடன் மீட்கப்பட்ட 475 போர் தற்போது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பெற்று வருகின்றனர்.

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் உள்ள விடுதிகளில் பாதிப்புக்குள்ளான நோயாளர்களில் ஆண்கள் 125பேரும் பெண்கள் 97பேரும், குழந்தைகள் 28பேரும் அவசரசிகிச்சை நோயாளர்கள் 4பேருமாக 254காய மடைந்தோர் தங்கவைக்கப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளப்பெற்று வருகின்றது.மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 120பேரும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 64 பேரும் கிளிநொச்சி தருமபுரம் மகாவித் தியாலயத்தில் 37பேரும் தங்கவைத்து சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மற்றும் மேற்படி பாதிப்பிற்குள்ளானவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் யாழ்.மாவட்ட வைத்தியசாலையிலிந்து 10 மருத்துவர்களும் 3தாதியர்களும் கிளிமாவட்ட . வைத்தியசாலைக்கு வரவழைக்கப்பட்டு நோயாளர்களுக்கான சிகிச்சைகள் இடம்பெற்று வருகின்றது. மற்றும் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரின் தமிழீழ சுகாதார சேவையினர் யாழ். மருத்துவபீட மாணவர்கள் இணைந்து நோயாளர்களுக்கான சிகிச்சையினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ).

## தென்பகுதியில் கடல் கொந்தளிப்பு அனர்த்தம்...


காலி


காலி


பெந்தோட்டை

-மருதங்கேணிப் பிரதேசத்தில்-

## காணாமல் போனோரை பதிவு செய்ய புதுக்காட்டுச் சந்தியில் செயலகம்

இயற்கையின் சீற்றத்தால் காணாமல்போனோரைப் பதிவு செய்யும் முகமாக புதுக்காட்டுச் சந்தி செயலகம் ஒன்று இன்று முதல் இயங்கவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.இதன் மூலம் காணாமல் போனோரை இன்று முதல் இச் செயலகத்தில் பதிவு செய்யலாம் எனவும் இதன் மூலம் இறந்து அடக்கம் செய்யப்பட்டோர் என்பனவற்றைப் பற்றிய தகவல்கள் வழங்கலாம் எனவும் அரசஅதிபர் தெரிவித்துள்ளார். (28,லோ)

## நோர்வே இந்தியா உட்பட பாதிக்கப்பட்டோருக்கு உதவி

இலங்கையில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென நோர்வே அரசாங்கம் 168 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது. அமெரிக்கா ஒரு கோடி ரூபாவை வழங்கியுள்ளது. பிரான்ஸ் வானூர்தியின்மூலம மருத்துவப்பொருட்கள் எடுத்துவரப்படவுள்ளன. இந்தியாவிலிருந்து நான்கு கப்பல்களில் நிவாரணப்பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. பாகிஸ்தான் பெறுமதி வாய்ந்த நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. ஜப்பான் மருத்துவ குழு ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (32)

## பூநகரி கரையோரப்பகுதி மக்கள் பாடசாலையில் தஞ்சமடைந்தனர்

கடந்த சில தினங்களாக ஏற்பட்ட கடல் சீற்றத்தினால் பூநகரியில் கரையோர பிரதேச மக்கள் பாடசாலையில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

பூநகரி வடபகுதியைச் சேர்ந்த கரையோர கிராம மக்களாகிய பள்ளிக்குடா, வினாசியோடை, கௌதாரிமுனை, கல்முனை, வெட்டுக்காடு செம்மண்குளம் ஆகிய மக்கள் பூநகரி ம.வி இல் 380 குடும்பங்களும், பூநகரி சிறீவிக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 110 குடும்பங்களும், அத்தாய் முத்தூர் குமாரசாமி வித்தியாலயத்தில் 38 குடும்பங்களும் 26 ஆம் திகதி வரை தங்கியுள்ளனர்.

அத்துடன் பூநகரி தென்பகுதியைச் சேர்ந்த கரையோர மக்களை நாச்சிக்குடா முன்பள்ளி, நாச்சிக்குடா பொது மண்டபம், முழங்காவில் முன்பள்ளி, முழங்காவில் பொது மண்டபம் ஆகியவற்றில் தங்கியுள்ளனர்.இம் மக்களுக்குரிய உணவுகளைப் பூநகரி அ.வி புனர்வாழ்வுக் கழகமும், முழங்காவில் அபிவிருத்தி புனர்வாழ்க்கழகமும் வழங்கி வகுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை அரச அதிபரின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் செயற்படுவதுடன் இம்மக்களிற்குப் பூநகரி அரசியல் துறையினரும், கடற்புலிகளும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை பள்ளிக்குடா நாச்சிகுடா, பூநகரி ஆலடிப்பகுதி வலைப்பாட்டுப்பகுதியில் கடல் பெருக்கெடுப்பதும் வற்றுவதுமாக மாறிச் செயற்பட்டு வருவதால் மக்கள் மனதில் வெள்ள அபாயம் ஏற்படுமோ என அச்சம் ஏற்பட்டுள்ளது. (34)

## சனாதிபதி சந்திரிகா நாடு திரும்பினார்

தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த சனாதிபதி சந்திரிகா நேற்று நண்பகல் நாடு திரும்பினார். யுஎல் 503 என்ற வானூர்தியில் அவர் இலங்கையை வந்தடைந்தார். இதேவேளை இந்தியாவின் மூன்று எம்ஐ 24 உலங்கு வானூர்திகள் நிவாரணப்பணிக்ளுக்காக நேற்று மதுரையில் இருந்து கட்டுநாயக்கவுக்கு வந்தடைந்துள்ளன.

## வடக்கு கிழக்கிற்கு ஏற்பட்ட இழப்பை அரச ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்கின்றன

- தமிழ் கூட்டமைப்பு பா.உ ரவிராஜ்

(அலுவலக செய்தியாளர்)

இயற்கை அனர்த்தத்தின் பாதிப்பு இலங்கையைப் பொறுத்த வரையில் வடக்கு கிழக்கில்தான் அதிகம். ஆனால் இன்று வரை அரச ஊடகங்கள் அதனை இருட்டடிப்புச் செய்து வருவதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது கிழக்குப் பகுதியில் பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது. இதனை வெளிநாடுகளுக்கு தெரிவிப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்க முடியும்.

மக்களின் உதவிகள் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சில உதவிகளை செய்து கொண்டுள்ளோம்., தொடர்ச்சியாகவும் செய்யவும் திட்டமிட்டுள்ளோம்.

இயற்கையின் சீற்றத்தால் அனைத்தையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை அரசாங்கமும், சர்வதேச நாடுகளும் வழங்குவதன் மூலம் தான் பெறமுடியும்.

ஆனால் இன்று வரை வட-கிழக்கு பகுதியில் ஏற்பட்ட இழப்புக்களை அரச ஊடகங்களில் செய்திகள் இருட்டடிப்பு செய்யப்பட்டு சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை.

இழப்புகளின் சரியான தகவல்களைஅரசஊடகங்கள்இருட்டடிப்பு செய்துதென்னிலங்கை அழிவுகளை பெரிதுபடுத்திக்காட்டி வருவதையே காண முடிகின்றது.

எனவே இயற்கை அனர்த்தங்களில் கூட தென்னிலங்கையின் சில ஊடகங்கள் பாகு பாடுகாட்டுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே வடகிழக்கில் பாதிக்கப்பட்டவர்களின் உண்மையான நிலைமையை வெளிக்கொணர்வதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு பாடுபடும். இது உறுதி எனவும் ரவிராஜ் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படவுள்ள நிவாரண உதவிகள் வடக்கு கிழக்கு மக்களுக்கு உரியவகையில் சென்றடையவேண்டும் எனவும் அவை விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தினூடாக வழங்குவதன் மூலமே சரியான முறையில் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையும். எனவே விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திமக்களால் வழங்கப்படும் நிவாரண உதவி பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையவேண்டும் எனவும் ராவிராஜ் மேலும் தெரிவித்தார். (லோ,28)

## முல்லை,திருமலை,ஊர்காவற்றுறை சென்ற 5 வட்டக்கச்சி வாசிகளைக் காணவில்லை

வட்டக்கச்சியிலிருந்து பல்வேறு இடங்களுக்குச்சென்ற வேளை ஐவர்க்காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்கராசாவேணி பருத்தித்துறை சென்றவரைக் காணவில்லை. உதயகீதன் நேசன் ஊர்காவற்றுறை சென்றவரைக்காணவில்லை. சிவராசா சிவகுமார்(றாஜன்) திருமலை சென்றவரைக்காணவில்லை. சுப்பிரமணியம் அமிர்தலிங்கம் செம்மலை சென்றவரைக்காணவில்லை. குமார் பல்பொருள் வாணிப உரிமையாளர் முல்லைத்தீவுக்குச்சென்றவரைக் காணவில்லை.

## சிறி.புலனாய்வுத்துறையினரின் செயலால் பிரயாணிகள் அசௌகரியம்

புளியங்குளம் முகமாலை பகுதியின் இராணுவ சோதனைச் சாவடிகளில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத்துறையினரின் நடவடிக்கைகளால் மக்கள் எரிச்சலடைந்துள்ளனர்.மேற்படி சோதனைச்சாவடிகளில் சிறிலங்கா இராணுவ புலனாய்வுத் துறையினரால் குறிப்பாக வன்னிப் பிரதேசங்களில் இருந்து வடபகுதிக்கு வெளியே செல்லும் பிரயாணிகளிடம் வன்னிப்பிரதேசத்தின் பிரச்சினைகளை கேட்டறிந்து பல விடயங்களையும் விசாரித்து வருவதால் இதனூ டாக பயணங்களை மேற்கொள்ளும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். (24)


# கடல் கொந்தளிப்பால் வடமராட்சி கிழக்கில் உயிரிழந்த மக்களில் ஒரு தொகுதியினர்

## நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற் கொந்தளிப்பினால் வடமராட்சிக் கிழக்குப் பகுதியில் மரணமான பொதுமக்களின் ஒருதொகுதியினரது விபரங்கள் வருமாறு

மயில்வாகனம் பார்வதிப்பிள்ளை (வயது-60) ஆழிய வளை, பேதுறுப்பிள்ளை ஜோன்லேரேஸ் (வயது -72) தாளையடி, விஜித்தகுமார் சுபாஜினி (வயது-31) ஆழியவளை, சசிகரன் தனுசிகா (வயது-08) ஆழியவளை, அன்ரனி யூட் மேரிமாக்கிறட் (வயது-27) குடாரப்பு, விஜித்குமார் விஜிந்தன்(வயது-4) ஆழியவளை, சந்திரகுமார் செல்வராணி (வயது -27) ஆழியவளை, அருளானந்தம் அனற்பிருந்திகா (வயது -11) தாளையடி, ஆறுமுகம் தவமணிதேவி(வயது-56) ஆழியவளை, துரை ராசசிங்கம் ரசிந்தன் கட்டைக்காடு , காண்டீபன் லீமா (வயது -11) ஆழியவளை, சசிகரன் றஜிதா(வயது-24) ஆழியவளை, தியாகராசா சின்னம்மா(வயது-70) ஆழியவளை, துரைராச சிங்கம் ரசிகரன் (வயது-02) மருதங்கேணி, பெண்குழந்தை ஒன்று (வயது இரண்டரை) மருதங்கேணி, நிமல்சிறிகௌசலா (வயது-24) மருதங்கேணி, தாமுவரன் (வயது- 12) மருதங்கேணி, சந்திரமேகன் சசிகலா (வயது-26), கந்தையா சிறிதரன் (வயது-37) வத்திராஜன், தங்கவேல் வரதராசா-பிரதீபா(வயது-இரண்டரை) மருதங்கேணி, அன்ரனி மரியயூஸ்செல் (வயது-28)முள்ளியான், கணவதிப் பிள்ளைவள்ளிப்பிள்ளை(வயது-55)உடுத்துறை,குகதாசன் திலக்சனா (வயது-மூன்றரை) உடுத்துறை, மரியாம்பிள்ளை கென்றிக் எமறின்சியா தாளையடி கிழக்கு, வினோத்குமார் (வயது-6), விஜியதாசன் ஜீவிதா (வயது-5) உடுத்துறை தாளையடி, செந்தூர் செல்வன் ரூபமாலா (வயது-26) கள்ளப்பாடு-முல்லை, விஜயதாசன் ஜினிதரன்(வயது-3) உடுத்துறை வடக்கு, தனுசன் குணசீலன் (வயது-7) உடுத்துறை, ஜெகநாதன் சாம்பவி (வயது-இரண்டரை), உதயகுமாரின் மகள் மருதங்கேணி, விக்கினேஸ்வரன் துரைடற்சிகா (7மாதம்) திலீபன்மருத்துவ மனை ஆழியவளை, குருசுமுத்து நாதன் (வயது-78) தாளையடி, பஞ்சாட்சரம்பவிதா (வயது-8) உடுத்துறை, நாகேந்திரம் சத்தியா (வயது -8) வத்திராயன் வடக்கு, அருமத்துரை கௌதினி (வயது-13) உடுத்துறை, ரவிச்சந்திரன் மனோகரி(வயது-30) வெற்றிலைக்கேணி, சந்திரன் சிவப்பிரகாஸ் (வயது -18) ஆழியவளை, திருநாவச் செல்வன் சந்திராவதி (வயது-35) ஆழியவளை, பரமேஸ்வரன் பத்மினி (வயது-32) ஆழியவளை, சேகர்நவேந்திர ராணி (வயது-33) ஆழியவளை, சேகர் துர்க்காதேவி(வயது-12) ஆழியவளை, பாலசுந்தரம் கனுசிகா (வயது-12) மருதங்கேணி, வீரகர்த்தி அர்ச்சனை (வயது-6) மருதங்கேணி ,ஆனந்தரூபன் நிர்மலாதேவி (வயது-31) வத்திராஜன், மகேந்திரம் வதனி (வயது-32) வெற்றிலைக்கேணி, செல்வகுமார் ஜீவராணி மருதங்கேணி, தனபாலசிங்கம் றோஸ்மலர் (வயது-50) மருதங்கேணி, வீரகத்தி சந்திர வதனா (வயது-40) மருதங்கேணி, குலசேகரம் கமலாதேவி (வயது-35) உடுத்துறை, தவராசதுரை குட்டி (வயது-25) உடுத்துறை, குலசிங்கம் பாக்கியம் (வயது-50) உடுத்துறை, தவராசதுரைமணி (வயது-53) உடுத்துறை, மரியநாயகம் மகள் டிலக்சனா (2மாதம் ) உடுத்துறை, மகேந்திரம் சுகிர்தா (வயது-11) வெற்றிலைக்கேணி, மகேந்திரன் ஈழவண்ணன் (வயது-7) வெற்றிலைக்கேணி, குலவீரசிங்கம் அம்மனா (சறோசாதேவி) (வயது-30) உடுத்துறை , திருப்பதி நாதன் நிறஞ்சனா (வயது-10) உடுத்துறை, சின்னத்தம்பி ஜசிந்தா (வயது-14) ஆழிய வளை, முருகேசு அன்னம்மா (வயது-26) உடுத்துறை, பாலகுமார் அஜிதா (வயது-35) ஆழியவளை, பாலகுமார் பால்ராஜ் (வயது-10) ஆழியவளை, பாலகுமார் பார்த்திகா (வயது-08) ஆழியவளை, பாலகுமார் பார்த்தீபன் (வயது-6) ஆழியவளை, கணபதிப்பிள்ளை செல்லம்மா (வயது-60) ஆழியவள்ள, வல்லிபுரம் கணபதிப்பிள்ளை (வயது-80) ஆழியவளை , சின்னராசா சிவரஞ்சினி (வயது-8) வெற்றிலைக்கேணி, சின்னராசா புஸ்பராணி (வயது-40) வெற்றிலைக்கேணி, செல்லத்துரை அஜித்குமார் (வயது-6) வெற்றிலைக்கேணி, பரமேஸ்வரன் பபுதன் (வயது-8) வெற்றிலைக்கேணி, அன்ரன் யூதாகுருஸ் மேரிஅஜந்தா (வயது-7) வெற்றிலைக்கேணி, அன்ரன் யூதாகுருஸ், மேரிநிந்துஷ ா (வயது-4) வெற்றிலைக்கேணி, சின்னமுத்து லூத்தம்மா (வயது-80) வெற்றிலைக்கேணி, சிவகுமார் குமாரிகா (வயது-7) வெற்றிலைக்கேணி, லோகராசசுமித்திரா (வயது-9) வெற்றிலைக்கேணி, இரத்தினசிங்கம் பாகேஸ்வரி (வயது-30) உடுத்துறை, லோகராசா மயூரன் (வயது-7) வெற்றிலைக்கேணி, நாகேஸ்வரி (வயது-40) உடுத்துறை, புஸ்பலதா (வயது-35) வெற்றிலைக்கேணி, அருள்தாஸ் றேகா (வயது-17) வெற்றிலைக்கேணி, அருள்தாஸ் ஜெனசிகா (வயது-ஏழரை) வெற்றிலைக்கேணி, நவரத்தினம் மனோன்மணி (வயது-40) வெற்றிலைக்கேணி, லோகராசன் ஜெனிற்றா (வயது-28) வெற்றிலைக்கேணி, சிவராசா குணவதி (வயது-28) வெற்றிலைக்கேணி, மரியநாயகம் ஜெசிமா (வயது-24) வெற்றிலைக்கேணி, இராதுரை கலைமதி (வயது-19) வெற்றி லைக்கேணி, துரைரட்ணம் துசாந்தினி (வயது-10) ஆழியவளை, பாலகுமார் கட்டைபிள்ளை ஆச்சி, (வயது-100) ஆழியவளை, தினகரன் யோகராணி (வயது-48) ஆழியவளை, தினகரன் மகள் (வயது-28),ஆழியவளை தினகரன் மகளின்குழந்தை (வயது-ஒன்றரை)ஆழியவளை, திரு பாலசிங்கம் மனைவி (வயது-55) ஆழியவளை, கறுத்த மாரியாத்தாள் (வயது-65) ஆழியவளை, ஜேசுதாசன் எலிசபேத் (வயது-52) செம் பியன் பற்று), சிவகுமார் பவிகரன் (வயது-மூன்றரை) வெற்றி லைக்கேணி, வல்லிபுரம் நாதன் அனுஷா, (வயது-13) ஆழியவளை, சந்திரபாவு சசிதா (வயது-25) ஆழியவளை, ஜேக்குமார் நேசமலர் (வயது-25) ஆழியவளை ,சற்குணேஸ் வரன்லக்சிகா(வயது-7)ஆழியவளை, சற்குணேஸ்வரன் தீவிகா(வயது-2) ஆழியவளை, தளைய சிங்கம் சற்குணேஸ்வரன் (வயது-34) ஆழியவளை, பெஸ்கோ மதுசா (வயது-3) மாமுனை, சிறிசங்கர் சுலக்சனா(வயது-இரண்டரை) மாமுனை, கிறிஷ்ரினா தீபா (வயது-1 1/2), மாமுனை ரவீந்திளரன் யூடிற்றா (வயது-20) சுண்டிக்குளம், ரவீந்திரன் அனோஜன் (வயது-ஒன்றரை) சுண்டிக்குளம், அருளானந்தம் லாவண்ஜா (வயது-9) வெற்றிலைக்கேணி, நடராசா மகள் (வயது-30) குடாரப்பு, நடராசாமகேஸ்வரி (வயது46) குடாரப்பு,சந்திரசேகரம் சகுந்தலா தேவி (வயது-35) மாமுனை, இரத்தினகுலசிங்கம் இலட்சுமி தேவி (வயது42) மாமுனை, நடராசா லக்சன் (பேரன்) (வயது-5) குடாரப்பு, கணேசலிங்கம் விஜயகுமாரி (வயது-38), மாமுனை, விஜியமனோகரன் சியாமளா (வயது-28) வெற்றிலைக் கேணி, தவராசா சுலக்சன் (வயது-8) வெற்றிலைக்கேணி, தவராசா அருள்ராஜ் (வயது-8) வெற்றிலைக்கேணி.

# இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இந்தியாவுக்கு 111 ஓட்டங்களால் வெற்றி

## தொடரையும் கைப்பற்றியது



இந்தியா- பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் டாக்காவில் நேற்று நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 91 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இதன் மூலம் 3 போட்டி கொண்ட தொடரை 2-1 என்ற நிலையில் இந்தியா கைப்பற்றியது.

நாணயச்சுழற்றியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து, 348 ஓட்டங்களைப் பெற்றது.துடுப்பாட்டத்தில் சேவாக் 70, சச்சின் 47, கங்குலி 55,ராவிட் 60 ஓட்டங்களையும் யுவராஜ்சிங் அபாரமாக ஆடி 69 ஓட்டங்களை 32பந்துகளில் பெற்றார்.

பந்துவீச்சில் ராபிக் முகமட் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு மிகப்பெரிய வெற்றி இலக்கை நோக்கி ஆடிய பங்களாதேஷ் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

துடுப்பாட்டத்தில் ராஜன்சாலே 82, அஷ்ரபுல் 32, மொட்சயா 39 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் டெண்டுல்கர் 4,அகக்கர் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.போட்டியின் நாயகனாக சேவாக்கும் தொடரின் நாயகனாக முகமட் ஹைவ்வும் தெரிவாகினர்.

# ஜாக் கலிஸ் சதம் 193 ஓட்டம் முன்னிலையில்



தென்னாபிரிக்க- இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி அதன் முதல் இனிங்சிற்காக 332 ஓட்டங்களை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் கலிஸ் அபாரமாக ஆடி சதமடித்ததுடன் 162 ஓட்டங்களை குவித்தார். இவரைவிட பொலக் 43 ருடெல்ப் 32 ஓட்டங்களை கூடுதலாக பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்காட், ஹாக்மிகசன் தலா.3 விக்கெட்டுக்களையும் பிளிண்டொப் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.




இரண்டாவது இனிங்சை ஆடும் இங்கிலாந்து விக்கெட் இழப்பின்றி 30 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 139 ஓட்டங்கள்.

# மெல்பேர்ன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலிய அணி தடுமாற்றம்



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் மெல்பேர்னில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவின் போது தனது முதல் இனிங்சிற்காக ஆடும் அவுஸ்திரேலியா 5 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் 50 ஓட்டங்களையும், கிளார்க் 20 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்டமிழக்காது. மாட்டீன் 67 ஓட்டங்களையும் பெற்றார்.

ஹெய் டன், பொண்டிங், லீமன் ஆகியோர் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் அக்தர் 3 விக்கெட்டுக்களையும், டினேஷ் கனேரியா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதல் இனிங்சிற்காக 341 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் யூசுப் யுஹானா 111 ஓட்டங்களையும், யூனிஸ்ஹான் 87, சல்மான்பட் 70, ஹகமான் அக்மல் 24 ஓட்டங்களை முறையே அதிகபட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் கிளெஸ்பி, ஷேன்வோன் தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.


# பூர்வீக கிரிக்கெட் வீரர்களை அவுஸ்திரேலியா கௌரவித்தது



அவுஸ்திரேலியாவின் பூர்வீக கிரிக்கெட் வீரர்களைச் சேர்ந்த குழுவினருக்கு அவுஸ்திரேலியா மரியாதை செலுத்தியுள்ளது. மெல்பேர்ன் மைதானத்தில் நிகழ்ந்த விசேட நிகழ்வொன்றில் 1868 ஆம் ஆண்டு இங்கிலாந்துக் கெதிராக ஆடிய வீரர்களே இவ் வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த செயல் தமக்கு பெருமையைத் தருகிறது என அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை தலைவர் பொப்மெரினன் தெரிவித்துள்ளார்.

முதலாவது பெண்கள் அணியின் வீரர், பெய்த் தோமஸ் முன்னாள் டெஸ்ட் வீரர். இயன் சப்பல், இயன்ஹீலி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



## சிந்தனைக்கு

எமது போராட்டம் தேச விடுதலையை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல; தேசத்தின் விடுதலையுடன் சமூகவிடுதலையையும் இலக்காகக் கொண்டே நாம் போராடிவருகிறோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## மக்களைக் காக்க....!

தாயகத்தில் பேரனர்த்தம் ஒன்று நிகழ்ந்து விட்டது. எவரும் எதிர்பார்த்திராத இப் பேரழிவால் தமிழ் மக்கள் பெரும் துயரத்தில் மூழ்கியுள்ளனர். தமிழ் மக்கள் கடந்த காலத்தில் யுத்தத்தால் பல அழிவுகளைச் சந்திருப்பினும் இவ்இயற்கை அனர்த்தத்தினைச் சந்தித்தது போன்று குறுகிய நேரத்திற்குள் எதிர்பாராத விதமாக பேரழிவைச் சந்தித்திருக்கவில்லை.

இப்பேரழிவை எவராலும் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது. விஞ்ஞானம் பெரும் வளர்ச்சி கண்டுள்ளபோதும் பூமியதிர்ச்சி தொடர்பான தகவல்களைத் துல்லியமாக எதிர்வு கூறத்தக்க வகையில் அது இன்னமும் வளர்ச்சி காணவில்லை. அதாவது சூறாவளி மற்றைய பாதகமான வானிலை தொடர்பான வானிலை எதிர்வு கூறுவதில் வளர்ச்சி கண்டது போன்று பூமியதிர்ச்சி தொடர்பாக எதிர்வு கூறும் வகையில் விஞ்ஞானம் வளர்ச்சி அடையவில்லை.

அவ்வாறு வளர்ச்சி அடைந்திருப்பினும் கூட சுமார் இரண்டாயிரத்தி ஐநூறு கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பால் ஏற்பட்ட கடலடிப் பூகம்பம் ஒன்றினால் இத்தனை தூரம் பேரழிவு ஏற்படும் என்பது குறித்து எதிர்பார்ப்பது கடினமானதொன்றே. ஆகையினால் முன் கூட்டி தெரிந்திருப்பினும் இப்பேரழிவு தவிர்க்கப்படமுடியாத தொன்றாகவே இருந்திருக்கும்.

இந்நிலையில் இப்பேரழிவில் இருந்து தற்காத்துக் கொள்ளும் வாய்ப்பை நாம் கொண்டிருக்கவில்லை என்றே கொள்ள வேண்டும். ஆகையினால் எதிர்பாராத வகையில் ஏற்பட்டுவிட்ட பேரழிவின் பின்னர் நாம் இன்று செய்ய வேண்டியது என்ன என்பதே இன்றுள்ள முக்கியமான வினாவாகும்.

பேரழிவைச் சந்தித்து தமது உறவுகளையும். உடமைகளையும் இழந்துள்ள மக்களுக்கு முதலில் தேவைப்படும் வைத்திய மற்றும் அவசர அத்தியாவசிய தேவைகளை வழங்க பல்வேறு நடவடிக்கைகள முனைப்புப்படுத்தப்பட்டுள்ளன. இதில் விடுதலைப்புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் செயற்பாட்டில் இறங்கியுள்ளன.

ஆகையினால் அனர்த்தத்தில் இருந்து காப்பாற்றப்பட்டு உயிர் பறிபோற நிலையில் வைத்தியசாலைகளை வந்தடைவோரை பல்வேறு நெருக்கடியின் மத்தியிலும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் ஓரளவேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நடவடிக்கைகளில் சிரமங்கள், நெருக்கடிகள் இருப்பினும் கூட இயன்றவரை திறம்பட மேற்கொள்ளப்படுவதாகவே கொள்ளலாம்.

இதற்கு அடுத்தகட்டமாக இவ் அனர்த்தத்தால் மரணித்துப் போனவர்களை மீட்டெடுப்பதும், நல்லடக்கம் செய்வதுமான பணி பெரும் பணியாக உள்ளது. இதற்குப் பாதிப்பிற்குள்ளான மக்களுக்குப பெரும் உதவி தேவையாகவுள்ளது. கடல் கொந்தளிப்பால அழிவைச் சந்தித்த மக்களிடம் தமது உயிரைத் தவிர வேறு எதுவுமே இல்லை. ஆகையினால் இதற்கான உதவி செய்யப்பட்டாக வேண்டும.

அடுத்ததாக அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு உணவு அளிக்கவும், தொற்று நோய்கள் பரவாது தடுத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுதல் அவசியமானதாகும். இவை சற்றுச் சிரமம் மிக்க காரியமே. ஆயினும் உள்ளூர் வளங்களையும், கைவசம் உள்ள வசதிகளையும், பாதிப்பிற்குள்ளாகாத மக்களின் துணை கொண்டும் சிறிது காலத்திற்குச் சமாளித்துக் கொள்ளமுடியும்.

இதேவேளை பேரழிவைச் சந்தித்துள்ள இலட்சக்கணக்கான மக்களின் குடியிருப்புக்களையும், அவர்களின் தொழில் முயற்சிகளையும் மீளக் கட்டி எழுப்பும் புனர்வாழ்வுப் பணிக்கென பெரும் தொகையிலான நிதிவளம் தேவையாகவுள்ளது. ஏற்கனவே யுத்தத்தால் அழிவுகளைச் சந்தித்து பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் சுய முயற்சியில் மக்கள் மீண்டு வரமுற்பட்ட வேளையில் இவ்அனர்த்தம் அம்மக்களை மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ள தெனலாம்.

யுத்தத்தின் போதாவது கையில் கிடைத்ததைக் கொண்டு ஓடுவதற்கோ அன்றி உடமைகள் அனைத்துடனும் குடியிருப்புக்களை மட்டும் விட்டு வெளியேறவோ பலருக்கு வாய்ப்புக் கிடைத்ததுண்டு. ஆனால் இவ் அனர்த்தத்தால் உயிர் தப்பியவர்களிடம் உடலைத்தவிர–அதிலும் பாதிப்பிற்குள்ளானவர்கள் உண்டு வேறு எதுவும் இல்லை. அனைத்தையுமே கடல் காவு கொண்டு விட்டது.

இந்நிலையில் இவர்களுக்கு பெரும் உதவிகள் தேவையாகவுள்ளன. உலகில் மனிதாபிமான உணர்வு கொண்டவர்கள், அதற்கான அமைப்புக்கள் அனைவருமே இவர்களுக்கு உதவ முன்வரவேண்டும். தமிழர் தாயகப் பிரதேசத்தில் நிகழ்ந்துவிட்ட இவ் அனர்த்தங்களுக்குச் சிறிலங்கா அரசிடம் உதவி வழங்குவதனால் பயன் ஏதுமில்லை. ஏனெனில் அது தமிழ் மக்களின் கைகளுக்கு கிட்டுவது கடினமே. அத்தோடு தமிழ் மக்களின் அவலமென்பது ஒருவகையில் ஆட்சியாளருக்கு மகிழ்வூட்டுவதாகவே இருக்கக் கூடியதுமாகும்.

# தரைமட்டமான நிலையில் முல்லைத்தீவு.நகர்ப்பகுதி!

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகத்தின் கரையோரப்பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் முல்லைத்தீவு பகுதி முற்றும் தரை மட்டமான நிலையில் காட்சியளிக்கின்றன.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இவ் அனர்த்தத்தினால் முல்லைத்தீவு நகர்ப்பகுதி செல்வபுரம், கள்ளப்பாடு, அளம்பில் போன்ற கரையோரப்பகுதிகள் முற்றாக சேதமடைந்து காணப்படுகின்றன.

முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதி சுடு காடு போல் காட்சியளிக்கின்றது.

மேலும் இந்த அனர்த்தத்தினால் இதுவரை மீட்கப்படாத மக்களின் சடலங்களைத் தேடி எடுப்பதில் தமிழீழவிடுதலைப்புலிகளும், அரச தொண்டர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களின் தொண்டர்களும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

அத்துடன் நேற்று மாலை வரை எடுத்த கடும் முயற்சியினால் பலசடலங்கள் மீட்கப்பட்டன. மீட்டெடுக்கப்பட்ட சடலங்கள் உடனடியாக உரியமுறையில் அடக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நகரப்பகுதியில் முழுமையான நிலைப்பாடுகளை முல்லை நகர்ப்பகுதி கடற்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் அரவிந்தன் தெரிவிக்கையில்,

நகர்ப்பகுதியில் இருந்து குமுழமுனை சென்ற பேருந்து ஒன்றுநீரினால் மூழ்கடிக்கப்பட்டதால் பேருந்தில் இருந்து பல சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் மற்றும் நகர்ப்பகுதி எங்கும் தேடிஎடுக்கக்கூடிய அளவிற்கு வெளிப்படையாக உள்ள சடலங்களை மீட்டுள்ளதாகவும், ஏனைய இடிபாடுகளுக்குள் இருப்பவை மிகவும் விரைவில் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கரையோரப் பகுதியில் எந்தநேரமும் ஆபத்தான ஒருசூழ்நிலையே காணப்படுவதனால் அங்குபொதுமக்கள் எவரையும் செல்லவேண்டாம் என தெரிவித்தார்.

நேற்றுவரை முழுமையாக சடலங்களை மீட்காத நிலையில் இறந்தவர்களின் முழுவிபரம் தெரிவிக்கப்படவில்லை.

முல்லை.நகரம் ஓயாதஅலை நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளினால் மீட்டெடுக்கப்பட்ட பின்னர் அண்மை யில் வளர்ச்சி கண்டு வந்த ஒரு இடமாகமாறி வந்த வேளை இந்த இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இன்று சுடுகாடாக மாறிஇருப்பது அனைத்து மக்களையும் சோகத்தில் வீழ்த்தியுள்ளது. (கு)

# முல்லை. நகர்ப்பகுதி மக்கள் பாடசாலைகள், பொதுஇடங்களில் தஞ்சம்!

(அலுவலகசெய்தியாளர்)

முல்லைத்தீவு நகாப்பகுதியில் ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தத்தால் உறவுகளை இழந்தும், சொத்துக்களை இழந்தும், சொந்த இடத்தை இழந்தும் ஏதிலியாய் அலையும் மக்கள் முள்ளியவளை தண்ணீரூற்று, ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பகுதிகளில் உள்ள பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் முள்ளியவளையில் தண்ணீரூற்று வித்தியானந்தா கல்லூரியிலும், முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திலும், முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்திலும் மற்றும் அங்குள்ள பொதுநோக்கு மண்டபங்கள் போன்றவற்றில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இவர்களுக்கு தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர், வர்த்தகசங்கத்தினர், மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கம், அரச சார்பற்ற நிறுவனம் போன்றவை உடனடி உதவிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றன.

அத்துடன் பொதுமக்கள் தம்மால் இயன்றளவு உணவுவகைகளையும், உடுதுணிகளையும், வழங்கி அவர்களின் அவசர தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்துவருகின்றனர்.

மேலும் அங்கு வாழும் குடும்பங்கள் சிலவற்றில் தமது உறவினர்கள் இதுவரை இறந்துள்ளனரா அல்லது இறந்த சடலங்கள் மீட்கப்படவில்லையா என்று அவதிப்படும் நிலையில் காணப்படுகின்றனர்.

அடுத்து புதுக்குடியிருப்பு பகுதியில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம், கொக்குளாய் மகாவித்தியாலயம் மற்றும் பொது இடங்கள் ,உறவினர்களின் வீடுகள என்பனவற்றில் பலகுடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களுக்குரிய அவசர உடனடித் தேவைகளை புதுக்குடியிருப்பு வர்த்தகசங்கத்தினர், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் அரச சார்பற்ற நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து அவர்களுக்குரிய உணவுத்தேவைகளையும், உடுதுணிவகைகளையும் வழங்கிவருகின்றனர்.

அத்துடன் மழை தொடர்ந்து பெய்வதனால், போக்குவரத்துக்கள் உணவு பரிமாற்றங்கள் என்பன சிரமத்தின் மத்தியில் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் தமது சொந்த இடத்திற்கு உடனடியாக திரும்ப முடியாத மக்கள் இன்னும் தற்காலிகமாக தங்கி இருக்கும் காலம் வரை இந்த சீரற்ற காலநிலையினாலும் அவதியுறும் மக்களிற்கு உடனடியாக உதவிபுரியவிருக்கும் நிறுவனங்கள் அனைத்தும் உடனடியாக வந்து உதவிகளை வழங்குமாறும் அரசியல் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளன. (கு)

# மட்டு.இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் நிவாரணப் பணியில் புலிகள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்புவி நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் இராணுவக் கட்டுப்பட்டுப்பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தற்போது ஈடுபட்டுள்ளார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் குறிப்பாக நாவலடிப் பிரதேசத்தில் இடிபாடுகளுக்குள் புதையுண்டு கிடக்கும் சடலங்களை மீட்கும் பணிகளில் 30 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிப் போராளிகள் ஈடுபட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் பானு, மாவட்ட தளபதி ராம், மாவடி முன்மாரி கோட்டத் தளபதி ரமணன் ஆகியோர் நேற்று நாவலடிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை நேரில் சென்று பார்வையிட்டார்கள். மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளைச் சென்று பார்வையிட்டார். இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள கரையோர கிராமங் களிலிருந்து வெளியேறியுள்ள மக்களில் 75 ஆயிரம் பேர் வரை தமது கட்டுப்பாட்டு பிரதேசத் திற்குள் வந்துள்ளதாக மாவட்ட தளபதி ராம் தெரிவித்தார். 50இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங் களிலும், தனியார் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டு இவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை நாவலடி பிரதேசத்தில் நேற்று சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட விடுதலைப் புலிப்போராளிகள் இராணுவத்தினரின் தேவைகளை அறிந்தும் உதவிகளை புரிந்தனர். கல்லடி இராணுவ முகாமில் கட்டட இடி பாடு களை அகற்றி போக்குவரத்துப் பாதையை சீராக்குவதில் விடுதலைப்புலிகளின் புல்டோசர் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்கிடையில் அனர்த்தம் காரணமாக கரையோரப் பிரதேசத்திலிருந்து வெளியேறி காயங்களுடன் மக்களோடு மக்களாக நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு இராணுவ வீரர் ஒருவரும் சென்று தஞ்சமடைந்தார். இவரின் காயங்களுக்கு சிகிச்சையளித்த விடுதலைப் புலிகள் நேற்று மாலை மன்முனை, கொக்கட்டிச்சோலை வாவி ஊடாக அவரை அழைத்து வந்து மன்முனை விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

# 79 ஆயுதப் படையினர் பலியானதாக சிறிலங்கா படைத்தரப்பு அறிவிப்பு!

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட கடற்புவி நடுக்கம் காரணமாக சிறிலங்கா இராணுவம் மற்றும் கடற்படையைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம். அல்லது காணாமல் போயிருக்கலாம் என அஞ்சப்படுகின்ற போதிலும் 79 பேர் தொடர்பான விபரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

சிறிலங்கா கடற்படை இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் நாகர்கோவில் பிரதேசத்தில் கடமையிலிருந்த 7 கடற்படைச் சிப்பாய்களும், மூதூர் பிரதேசத்தில் கடமையிலிருந்த 2 சிப்பாய்களும் உயிரிழந்துள்ளனர். இதனைத் தவிர 7 பேர் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவத்தரப்பு தகவலின் படி யாழ். மாவட்டத்தில் கடமையிலிருந்த லெப்டினன்ட் ஒருவர் உட்பட 25இராணுவத்தினர் உயிரிழந்துள்ளாதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கேணல் தர கட்டளை அதிகாரி உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும். இதனைத் தவிர 246 பேர் காயமடைந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கில் உயிரிழந்தோர் 3000 இற்கும் மேல்!

கடற் கொந்தளிப்புக்காரணமாக முல்லை , வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலும் 3000இற்கு அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். 4000இற்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர். 4000 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். 21000இற்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். பல கோடி ரூபா சொத்திழப்புக்கள் ஏற்பட்டுள்ளது.இதன்படி யாழ். மாவட்டத்தில் அதிகளவான அழிவினைச் சந்தித்த வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில், தாளையடி செம்பியன்பற்று, கட்டைக்காடு, உடுத்துறை, வண்ணாங்குளம், பள்ளிக்குடா போன்ற பகுதிகளில் இதுவரை 1000 பேர்வரை உயிரிழந்துள்ளனரென கருதப்படும் இதே வேளை 1500 பேர் காயமடைந்துள்ளனர். 1000 பேர் காணாமற் போயுள்ளனர். 6000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.இதுவரை அடையாளம் காணப்பட்ட 300 இற்கும் மேற்பட்ட சடலங்கள் உறவினர்களாலும், தமிழர் புனாவாழ்வுக்கழகம், தமிழீழ அரசியல் துறையினராலும் புதைக்கப்பட்டுள்ளன.

இதன் போது காயமடைந்த 100-இற்கும் மேற்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் மருத்துவ முகாம்களிலும், கிளிநொச்சி மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுவரும் இதேவேளை காயமடைந்த 115 பெண்களும், 100 ஆண்களும் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு கடும் காயங்களுக்குள்ளானவர்களில் பலர் யாழ்ப்பாணம். வவுனியா போன்ற வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு இடம்பெயர்ந்த 8190 இற்கு மேற்பட்டவர்கள் கிளி . மகாவித்தியாலயம், கிளி.மத்தியகல்லூரி மற்றும் இயக்கச்சி பாடசாலை, கோவில்வயல்,மாசார் அ.த.க பாடசாலை, புலோப்பளை , பளை, பூநகரி, சோரன்பற்று கணேசா வித்தியாலயம் போன்ற இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் 2000 பேர் உயிரிழந்துள்ளனர். 2500 பேர் காயமடைந்துள்ளனர். 3000 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர். 15000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கள்ளப்பாடு. செல்வபுரம்,சின்னத்தங்காடு வட்டுவாகல், சிலாவத்தை அளம்பில். செம்மலை , நாயாறு, மாத்தளன்,அம்பலவன் பொக்கணை, வலயன்மடம், மணற்குடியிருப்பு,கரைச்சி குடியிருப்பு, இரணைப் பாலையின் ஒருபகுதி போன்ற பிரதேசங்கள் முற்றாக அழிந்துள்ளன.

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இதுவரை 1600 இற்கு மேற்பட்ட உடல்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன. இதேவேளை கடற்கரைகளில் சடலங்கள் கரை ஒதுங்கியவண்ணமுள்ளதோடு இடிபாடுகளுக்குள் சிக்கிய உடல்கள் இன்னும் மீட்கப்படாமலுள்ள நிலை யில் மீட்கப்பட்ட உடல்கள் புதைக்கப் பட்டும் வருகின்றன.

இதேவேளை காயமடைந்த 2500இற்கு மேற்பட்டோருக்கு முள்ளியவளை மருத்துவமனை, புதுக்குடியிருப்பு வைத்தியசாலை பொன்னம்பலம் மருத்துவமனை,திலீபன் மருத்துவப்பிரிவு போன்ற மருத்துவமனைகளில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை இடம்பெயர்ந்தவர்களைப் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்,பொக்கணை மகாவித்தியாலயம், ஸ்ரீசுப்பிரமணியம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் 1800 குடும்பங்களையும், வித்தியானந்தாக் கல்லூரி, கலைமகள் வித்தியாலயம் மற்றும் பொது மண்டபங்களிலும் என 2200 குடும்பங்களையும், குமுழமுனை மகாவித்தியாலயம்,குமுழமுனை கமநல சேவை நிலையம் அப்பகுதி பொதுமண்டபங்கள் என்பனவற்றில் 170 குடும்பங்களையும் தங்கவைக்கப்பட்டுள்ளன. இவ்வனர்தத்தினால் இடம்பெயர்ந்தவர்களுக்கான உடனடி நிவாரணப்பணிகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர், அரசியல்துறையினர் மற்றும் ஏனைய துறையினர், பொது அமைப்புக்கள் கிராமமட்ட அமைப்புக்கள், பொது மக்கள் எனப் பலரும் வழங்கி வருகின்றனர்.

# அரசாங்கத்தின்அசிரத்தையே பேரழிவு ஏற்படக் காரணம்

## - புவியற்துறைப் பேராசிரியர் கபில தஹநாயக்க

சிறிலங்க அரசின் பெறுப்பற்ற செயலலே உயர்ந்தளவு உயிரிழப்பிற்குக் காரணம் எனச் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. வானிலை அவதானநிலைத்திடம் உள்ள புவியதிர்வு அளவுடும் கருவி செயழிலந்த போதும் அதனைத்திருத்துவதில் அரசாங்கம் காட்டிய அசிரத்தையே இத்தனை அழிவுக்குகாரணம் எனத் தெரியவிக்கப்படுகிறது. பசுபிக் நாடுகளில் புவியதிர்வு ஏற்பட்டால் அது தொடர்பில் அந்த நாடுகளின் காலநிலை அவதான அமைங்கள் எச்சரிக்கின்றன. ஆனால் இலங்கையிலும் சுமாத்திரா தீவில் இடம்பெற்ற புவியதிர்வு தொடர்பாக தகவலை வழங்கியிருந்தால் இலங்கையில் பாரிய உயிரழிவுகளை தடுத்திருக்கலாம் என பேராதனை பல்கலைகழக புவியியல்துறை பேராசியரியர் கபில தஹாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை மீண்டும் புவியதிர்வு மூலம் பாரிய அழிவுகள் ஏற்படும் என்ற வதந்தியை நம்பவேண்டாம் என காலநிலை அவதானமையம் கேட்டுள்ளது. புவியதிர்வு ஏற்பட்ட சுமத்திரா கடல் பகுதி உயிர்ப்புடன் இருக்கின்ற போதும்.பாரிய பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் இல்லை என அவர் தெரிவித்துள்ளர் எனினும் கரையோர பகுதி மக்கள் விழப்பாக இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்

## உயிரிழப்பு...

நல்லடக்கம் செய்யப்பட்டன. தென்னிலங்கையின் அம்பாந்தோட்டையில் சுமார் 2ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். மேலும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். களுத்துறையில் 700 சடலங்களும், மாத்தறையில் 850 சடலங்களும், காலியில் ஆயிரம் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் மாவடி ஓடை, பனிச்சங்கேணி, பால்சேனை, வாகரை,கோரளைப்பற்று, நாவலடிச்சந்தி, இறால் ஓடை,கதிரைவெளி, தாளன் ஓடைபோன்ற பகுதிகள் பாரிய அளவில் உயிரி ழப்பை சந்தித்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு காரணமாக பல ஆயிரக்கணக்காண மக்கள் வீடுவாசல்களை இழந்ததோடு பல நூற்றுக்கணக்கானோர் இறந்துள்ளனர். மூதூரில் 6000 குடும்பங்களும். கிண்ணியாவில் 6800 குடும்பங்களும், பட்டணமும் சூழலும் பகுதியில் 12,000இற்கும் அதிகமான குடும்பங்களும், குச்சவெளி பிரதேசத்தில் 4500 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் 211பேரும், கிண்ணியாவில் 229 பேரும், திருகோணமலையில் 18 பேரும், நிலாவெளி பிரதேசத்தில் 35 பேரும், இறந்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மூதூர் கிழக்கில் கடற்கரைச் சேனை,சம்பூர், மலைமுன்றல், இளக்கந்தை, சூடைக்குடா போன்ற பகுதிகளில் 30பேர்இறந்துள்ளதோடு சுமார் 65இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர்.இப்பிரதேசத்தில் கரையோரத்தை அண்டிய வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இவ்வாறு 2500 வீடுகள் வரை சேதமடைந்திருக்கலாம் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை நகரில் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குறிப்பாக புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை, உவர்மலை விவேகாநந்தா கல்லூரி, செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம், அபயபுரம் கனிஷ்ட பாடசாலை, போன்ற இடங்களிலும், கிண்ணியா பகுதியினர், மத்திய கல்லூரியிலும், முள்ளிப்பொத்தானை ஹிஜிரா மகா வித்தியாலயம் விக்னேஸ்வரா வித்தியாலயம். அரபா வித்தியாலயம். தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்திலும், தங்கவைக்கப்பட்டுள்ளனர். மூதூர் பகுதி மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து பெரியபாலம் பிரதேசத்தில் உள்ள பாடசாலையிலும், தோப்பூர் பகுதி பாடசாலைகளிலும்தங்க வைக்கப்பட்டுள்ளனர். இராணுவ கட்டுப்பாடற்ற விடுதலைப்புலிகளின் பிரதேச மக்கள் உயர் நிலப்பரப்புக்களிலும் தங்க வைக்கப்பட்டுள்னர்.

கடற்கொர்ந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மூதூர் பிரதேச மக்களை திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன், க.துரைரெட்ணசிங்கம், ஜயந்தவிஜயசேகர, மாவட்ட அரசாங்க அதிபர் காமினி ரொட்றிகோ,வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா ஆகியோர் விமானப்படை உலங்கு வானூர்தி மூலமாகச் சென்று பார்வையிட்டனர். இதே வேளை விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மூதூர் வைத்தியசாலைக்குச் சென்று இறந்தவர்களின் உடல்களைப் பார்வையிட்டதோடு முஸ்லிம் மத பெரியார்களையும் பிரமுகர்களையும் சந்தித்து துயரங்களைப் பகிர்ந்து கொண்டார்.

கரையோரப்பிரதேசங்கள் யாவும் முற்றாக அழிவுற்ற நிலையில் இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட இந்த கடல் அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டோருக்கு விடுதலைப்புலிகளின் போராளிகள், கடற்புலியினர், படையினர், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் பல்வேறு உதவிகளைப் புரிந்தனர்.இவர்களுக்குவேண்டிய உணவுப்பொட்டலங்ளை விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரும் பல்கலைக்கழக மாணவர்களும் சேகரித்து வழங்கினர்.

இலங்கை முழுவதும் இயற்கை அனர்த்தத்தினால் இதுவரை 15ஆயிரம் பேர் வரை உயிழந்துள்ளனர்.இதில் வடக்கு கிழக்கில் மாத்திரம் 10000இற்கும் மேற்பட்டோர் பேர் வரை உயிரிழந்துள்ளனர் முல்லைத்தீவில் மாத்திரம் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர் .வடமாராட்சி கிழக்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலி யாகினர். திருகோர்ணமலையில் இதுவரை 790 சட லங்கள் மீடக்கப்பட்டுள்ளன.



கடற்கொந்தளிப்பால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனேடிய தமிழ் வானொலி நிதிதிரட்டி வருகிறது. இந்நிதி தமிழர்புனர்வாழ்வுக்கழக மூடாக அனுப்பிவைக்கப்படவுள்ளது. (படம்:- எழிலன்)

# காணாமல் போனோர் விபரம் பதிவு செய்யக்கோரிக்கை

நேற்று முன்தினம் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக பல மனித உயிர்கள் அழிக்கப்பட்டும், பலர் காணாமல் போயும் உள்ளனர். இந்தப் பேரவலத்தின் காரணமாக சாவடைந்தவர்களின் விபரம் தெரியாமல், உற்றார் உறவினர்கள் எங்கேயெனக் காணாமலும் இருப்பவர்கள் தமக்கு அண்மையிலுள்ள காவல் பணிமனைகளுக்குச் சென்று விபரங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு தமிழீழக் காவல்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் கோரியுள்ளனர்.

## வெளிநாடுகளிலுள்ள...

தகவல் சேகரிப்பில் ஈடுபட்டு வருபவர்கள் தெரிவித்தனர். தமது உறவுகளுக்கு தமது நிலையை தெரிவிப்பதற்கு மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு மக்கள் மத்தியில் பெரும்வரவேற்பு நிலவுகிறது(லோ)

## மட்டு...

மீக்வேண்டியிருப்பதாவும் நிலத்தை அகழும் பலம் இலங்கையில் இல்லையென்றும் தெரியவருகிறது. நாவலடிக் கிராமம் மண்ணால் மூடப்பட்டு இந்தக்கிராமத்திலிருந்த 28000 பேரில் 6000 பேர்மட்டுமே தப்பியுள்ளனர். ஏனையோர் மண்ணோடு மண்ணாகிவிட்டார்கள். இவர்களைத் தோண்டியெடுக்கப் பல காலம் செல்லலாம் என்று தெரிய வருகிறது.

## கடற்...

எடுத்துப் பயன்படுத்தவேண்டாம். குடிநீரைஇந்தப்பகுதிகளில் இருந்து பெறவேண்டாம். இவற்றின் மூலம் உயிர்ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய தொற்றுநோய்கள் உருவாகலாம். எனவே மேற்குறித்த வேண்டுதலுக்கு அமைவாக செயற்படுமாறும் வேண்டப்படுகின்றனர். அது மட்டுமன்றி முகாம்களில் தங்கி இருக்கும் மக்களும் சுகாதார நடைமுறைகளை சீரான முறையில் கடைப்பிடித்து தொற்று நோய் அபாயத்தில் இருந்து பாதுகாப்பாக இருக்குமாறும் சுகாதார சேவையினர் மக்களை வேண்டியுள்ளனர். (லோ)

## வீரவணக்கம்...

தேசியத் துணைப்படைவீரர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

2 ஆம் லெப்டினன்ட்-செல்வரூபன்(செல்வநாயகம்-செல்வரூபன் கச்சேரியடி யாழ்ப்பாணம் பிள்ளையார் கோவில் அருகில் சாந்தபுரம் கிளி நொச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

24.12.2004அன்று பயிற்சியின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.வீரவேங்கை உலகச்சோழன்(ஜோசப்-உதயகுமார் 3 ஆம் கண்டம் முத்தையன்கட்டு இடதுகரை) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## தாயகத்தில்....

குழுவே பொறுப்பாக இருப்பதோடு அனைத்து நிவாரணப் பணிகளையும் இந்த அமைப்பே ஒருங்கினைக்கும் இதன் முதற்கட்டமாக பளை-புதுக்காட்டுச் சந்தியிலும், முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியிலும் இரு அலுவலகங்கள் செயற்படவுள்ளது. புதுக்காட்டுச் சந்தி அலுவலகத்தில் இதற்கான முதற் கட்டம் இன்று காலை 9.00 மணிக்கும் வித்தியானந்தக்கல்லூரியில் மாலை 2.00 மணிக்கும் இடம் பெறவுள்ளது.

இதன் இரண்டாவது கட்டமாக கிழக்கிலும் செயலணிக்குழு அமைக்கப்படவுள்ளது.தமிழழீழப் பகுதிகளில் நடைபெறும் அனைத்து நிவாரண புன்ர்வாழ்வுப் பணிகள் அனைத்தையும் இந்த செயலணிக் குழுவே ஒருங்கிணைக்கும்.

## இயற்கை...

கிடைக்கப்பெற்ற பொருட்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உடனுக்குடன் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களிற்கு வழங்கி பராமரித்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களிற்கு உதவிப் பொருட்களை வாங்கிக் கொடுக்குமாறு கனடா வாழ் ஈழத் தமிழ் அன்பர் ஒருவர் ஒரு லட்சம் ரூபா பணத்தை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதியிடம் கையளித்துள்ளார்.

அழகரெட்ணம் ஜெயமணி என்ற அன்பரே ஒரு லட்சம் ரூபா பணத்தை அன்பளிப்பாக நேற்று முற்பகல் வழங்கினார். மற்றும் தட்டுவன் கொட்டி கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் 15,000/= ரூபா பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.இயற்கை அனர்த்தத்தினால் பேரவலம் ஏற்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனைவரதும் உதவிகளையும், ஒத்தாசைகளையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டி நிற்கின்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தொண்டர்கள் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் துன்பப்பட்ட மக்களோடு மக்களாக நின்று உதவி வருகின்றதை காணக்கூடியதாக வுள்ளது.

பேரழிவுக்குள்ளான பிரதேசங்களில் இருந்து மக்களை பாதுகாப்பாக மீட்பதில் இருந்து முகாம்களில் தங்கவைத்து சமைத்தஉணவு வழங்கியும் உடைகள் இதர பொருட்களை வழங்கியும் பராமரிப்பது வரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர் அர்ப்பணிப்புடன் மேற் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (லோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது